சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone : No. 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 4-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 43-ம் இலக்கம்

## கிறிஸ்தவ ஒற்றுமையை உருவாக்க

### முன்னெருபோதும் இல்லாத முயற்சிகள்

"உலகமடங்களும் தேசப்பிரச்சினைகளும், தேசியவாதப்பிரச்சினைகளும், நாடுகளிடையே அரசியல் குழப்பங்களும் கொந்தளிப்புகளும் அலைமோதி உலகையே ஒரு அழிவுக்கு கொண்டுவந்து விடுமோ என்று அச்சுறுத்திக் கதிகலங்க வைக்கும் இச்சமயத்தில், கிறிஸ்துவின் நாமத்தினுல், ஆன்மீக ஒருமைப்பாட்டுக்காகவும், கிறிஸ்தவ ஐக்கியத்துக்காகவும் செபமுயற்சிகளும், வேறுமுயற்சிகளும் நடைபெற்று வருவது கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் சாந்தியளிக்கக்கூடிய காரியமாகும்."

இவ்வாறு பரிசுத்தபாப்பரசரின் இராச்சிய காரியதரிசியான கருதினுல் சிக்கொஞ்ஞானி ஆண்டகை அவர்கள் முதன்முறையாகக் கிழக்கு - மேற்கு கிறிஸ்தவசபைகளின் ஐக்கியம்பற்றிய வேண்டுகோள்விடுத்தபோது குறிப்பிட்டார். நேப்பிள்ஸ் நகரிலே அண்மையில் நடைபெற்ற இத்தாலிய 8-வது செபவாரத்தை முன்னிட்டே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது,

கருதினுல் சிக்கொஞ்ஞானி ஆண்டகை அவர்கள் கிழக்கு-மேற்கு கிறிஸ்தவசபைகளின் சரித்திர உளத்தத்துவ வேறுபாடுகளை விளக்கியபோது. இவ்வேறுபாடுகளுக்கும், வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும், மேலும் அவை காலங்கடந்த பிரச்சினைகள் என்றும் குறிப்பிட்டார். இக்காலத்துக்கு ஒத்துவராதவைகள் அவை என்றும் கூறி, விசுவாசத்தையும், கிறிஸ்துவ தருமத்தையும் பொறுத்த கிழக்குத்தேச சபைகளின் விருப்பங்களும், நம்பிக்கைகளும், இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்திஞல் விளையும் பயன்களாக நாம் எதிர்பார்க்கலாம் என்பதையும் அழுத்திஞர்.

கடந்தமாதம் ரேட்ஸ் என்னுமிடத்தில் கீழ்த்தேசபிரிவினைச் சபைகளின் மாநாடு ஒன்றுநடைபெற்றது. கடந்தவருடம் ஒத்திப்போடப்பட்ட இம்மாநாடு. விசுவாசசம்பந்தமானதும், போதக சம்பந்தமானதுமான பிரிவினைச் சபைகளுக்குப் பொதுவான விசுவாச உச்சாரணம், திருமறைநூலின் புதியமொழிபெயர்ப்பு, சடங்குகளில் சாதாரணகிறிஸ்தவர்கள் பங்குபற்றல், சந்நியாசவாழ்வின் அபிவிருத்தி— இன்றைய சமூக, சன்மார்க்க விடயங்களில் திருச்சபையின் பங்குஎனும் விடயங்களை ஆராய்ந்தது. வேறுவிதமாய்ச் சொல்லப்போனுல், பிரிவினைச்சபைகளும், கத்தோலிக்க திருச்சபையைப் போலக் கிறிஸ்தவசபைகளின் ஐக்கியத்துக்கான வழிவகைகளை இன்றைய உலகநிலைபரங்களோடு தொடர்புபடுத்தி ஆராய்ந்துவருகின்றன என்றே கூற வேண்டும்.

இம்மாநாடு பிரிவினைச்சபைகளினது பொதுச்சங்கத்துக்கு ஆயத்தமாகவே நடைபெற்றது. இச்சங்கம், இவ்வருடம் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் உலக கிறிஸ்தவசபைகளின்மாநாட்டை கருத்திற்கொண்டே கருமமாற்றியது.

கிறிஸ்தவசபைகள் என்றுமில்லாதவகையில் அவற்றின் ஐக்கியத்தை உருவாக்க முயற்சிகள் செய்யும்போது கொம்யூனிஸ்த சர்வாதிகாரிகள் அதை உற்று நோக்கிக்கொண்டு பயப்பிராந்தி நாடகமாடிக் கொண்டிருக்கிருர்கள். கிறிஸ்தவசபைகள் அமைக்க முயலும் ஒற்றுமை ஆன்மீக ஒற்றுமை. அது கொம்யூனிஸ்த லோகாயதத்துக்குச் சவால் கொடுக்குமளவுக்கு ஓங்கியுள்ளது

இன்றைய லோகாயதசகாப்தத்தில் உலகம்முழுதும் தேடும் சமாதானத்துக்காக அல்ல, ஆன்மீக சமாதானத்துக்காகத்துணிவுடன் கருமமாற்றிவருவது கிறிஸ்தவத்தின் இலட்சியமாய் அமைந்திருப்பதைக் காணும்போது மகிழ்ச்சி தருகின்றது. என்றுமில்லாத வகையில், பிளவுபட்டுக்கிடக்கும் உலகில், ஆன்மீக சமாதானத்தை — ஐக்கியத்தை நிலைநாட்டத் துணிந்து நிற்பது கிறிஸ்தவத்தின் துணிகரமான செயலாகும்.

**கிறிஸ்துவின் மந்தையும், இரட்சணிய படகுமாம்**

**திருச்சபையை ஆளும்**

**ஆயரும், மாலுமியும் நீடுவாழி!**



மன்பதையை வெண்குடைக்கீழ் ஒன்றுகூட்டி
மந்தையினை ஆயனிடம் கொண்டுசேர்க்க
என்பதையும் ஈந்துபர சேவை நல்கும்
எண்பத்து ஆண்டுநிறை ஏந்தல் வாழ்க!

### பாப்பரசருக்கு அன்பளிப்பு

பாப்பரசரின் நலனுக்காகவும் கருத்துகளுக்காகவும் கார்த்திகை 3, 4, 5-ந்திகதிகளில் குடும்பசெபமாலை அனுசரிக்கும்படி அயர்லாந்திலுள்ள குடும்பங்கள் எல்லாம் கேட்கப்பட்டிருக்கின்றன.

அயர்லாந்தின் மேற்றிராணிமார் ஐப்பசிமாதம் நடாத்திய கூட்டமொன்றில் முன்கூறியபடி தீர்மானித்து, இம்முறையாய்ப் பாப்புவின் 80-வது பிறந்ததினத்தைக் கார்த்திகை 4-ந்திகதி கொண்டாடுவது எனவும் முடிவு செய்தனர்.

### ஜனதிபதி கென்னடிக்கு திருச்சபையின் பரிசுத்தபண்டம் அடங்கிய பதக்கமும் கௌரவப்பட்டமும்

4-ம் நூற்றாண்டுமுதல் இதுவரை பரிசுத்த கல்லறையின் பட்டத்திஞல் மகிமைப்படுத்தப்பட்டவர்களுள் ஜனதிபதி கென்னடி எட்டாவது மனிதராகக் கணிக்கப்படுகிருர்.

கிரேக்கபிரிவினைச்சபை அதிகாரிகள் இந்தப்பதக்கம் உண்மைச் சிலுவையின் ஒருபாகத்தைக் கொண்டுள்ளது என்று கூறுகிருர்கள்.

ஜெருசலேமின் பிதாப்பிதாவான 1-வது பெனடிக்ற் அவர்

[ தொடர்ச்சி 8-ம் பக்கம் ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

## அழுத்கமையில் செபமாலைமாதா திருநாள்

கொழும்பு மேற்றிராசனத்தின் தென்கோடியிலே வெருவலையின் ஆதி அந்தத்தில் பெந்தோட்டை ஆற்றை எதிர்நோக்கி நூறுவயதுள்ள பழைய சிறிய அர்ச். செபமாலைமாதாவின் ஆலயம் ஒன்றுளது. அவ்வாலயத்தின் வருடாந்தவிழா சென்ற 8-ந் திகதி கொண்டாடப்பட்டது. இக்கோவில் கிறிஸ்தவர்கள் ஆக 100 பேராயிருந்தபோதும், கழுத்துறை வெருவலைப் பங்குகளிலிருந்து 3,000 க்கு அதிகமான பக்தர் விழாவுக்கு வந்திருந்தனர். திருநாளுக்கு முந்தியநாள் சனிக்கிழமை மாலையில் வேஸ்பர்பாடப்பட்டுத் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமருளப்பட்டது. மறுநாள் வண. இ. ஏ. போர்ஜியஸ், ஓ. எம். ஐ. சுவாமியவர்களால் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. பூசை முடிந்ததும், நற்கருணை ஆசீர்வாதமும் சுற்றுப்பிரகாரமும், தானதருமமும் இடம்பெற்றன.

---

## இருகலையில் பரிசுத்த செபமாலைமாதா திருநாள்

நாற்புறமும் பச்சைப் பசேலெனக் காட்சிதரும் அழகிய தேயிலைத்தோட்டங்கள். அத்தோட்டங்களின் மத்தியிலே உயர்ந்த ஒருமேட்டுத்தரையின் மீது கம்பீரமாக நிற்கின்றது பரிசுத்த செபமாலை நாயகியின் ஆலயம். ஒவ்வொருவருடமும் ஐப்பசிமாதத்தில் அவ்வூர்மக்கள் அக்கோயில்திருநாளை வெகுசிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

இவ்வருடமும் கொடியேற்றத்துடன் அத்திருநாள் வெகுசிறப்பாய்க் கொண்டாடப்பட்டது.

கண்டி மேற்றிராணியார் அதிவந். லீயோ, நாணயக்கார ஆண்டகையவர்கள் 7-ந்திகதி சனிக்கிழமை மாலை 5 மணியளவில் வந்திறங்கினார். அவரை ஏராளமான விசுவாசிகள் மேளவாத்தியங்களோடு வரவேற்றனர். ஆண்டவரவர்கள் தூய வெண்ணுடைகளின்மீது நடந்துசென்று கோயிலின் முன்றிலில் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில், தமக்குக் கொஞ்சம்கொஞ்சம்தான் தமிழ் தெரியும், இனிமேல்தான் படிக்கவேண்டும். ஆனால், வேலை நிறையவிருக்கின்றதுஎன்று அவர் தமிழில்கூறினார்.

மாலை $7\frac{1}{2}$ மணியளவில் ஆண்டகை அவர்களால் வேஸ்பர்பாடப்பட்டது. புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும் திருக்குடும்பக்கன்னியாஸ்திரிமடத்து கன்னியர்கள் கீர்த்தனைகள் பாடினார்கள்.

மறுநாட்காலை 6 மணிக்கு பங்குக்குருவர் வண. சூசைப்பிள்ளை சுவாமியார் பூசைஒப்புக்கொடுத்துப்பிரசங்கம்செய்தார். தமது பிரசங்கத்தில் "மரியாயி எப்படி எங்கள் சீவியமாயிருக்கிறாள்" என்று தெளிவாக எடுத்துக் காட்டினார்.

7 மணிக்கு ஆண்டகையவர்களின் பூசை நடைபெற்றது. அவர் சிங்களத்தில் பிரசங்கம் செய்தார்.

பின்னர் 9 மணியளவில் நுவரெலிப் பங்குக்குருவர் வண. சேவியர் சுவாமி அவர்களால் திவ்வியபூசைப்பலி நிறைவேற்றப்பட்டது. அவர், மாதாவின் வல்லமையைப்பற்றி அழகுபட அரிய ஒரு பிரசங்கம்செய்தார்.

அதன்பின் மாதாவின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. சுற்றுப்பிரகாரம் முடிந்தவுடன், மாதாவின்திருச்சுரூப ஆசீர்வாதம் அருளப்பட்டது. நண்பகல் 12மணிக்கு தானம் வழங்கப்பட்டது.

— இரா. ஞானப்பிரகாசம்

## காலஞ்சென்ற வண. செபஸ்தியான் பெர்னாண்டோ சுவாமிகள்

கார்மேகம்போன்ற ஒரு சனத்திரள் தேவனின் புகழ்பாடிக்கொண்டு தெருநடுவே சென்றுகொண்டிருந்தது. தனது குருத்துவவாழ்வின் அரைமடங்கை அவர்கள் மத்தியில் செலவு செய்த வண. ஞானப்பிதா செபஸ்தியான் பெர்னாண்டோவின் சடலம் அவர்கட்கு முன்னே கொண்டுசெல்லப்பட்டது. தங்கள் மத்தியிலே தங்கள் இனத்திலேயே உதித்துத் தங்களுக்கு எண்ணிறந்த உதவிகளைச் செய்த அவருக்கு அவர்கள் செலுத்தும் இறுதி மரியாதைக்கு அச்சனத்திரள் ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது.

### பிறப்பு வளர்ப்பு

இவர் 1897-ம் ஆண்டு நீர்கொழும்பில் சிறந்த பண்புவாய்ந்த சீரிய கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார்.

இவர் இளமையிலேயே தனது பெற்றோருக்கும் மற்றோருக்கும் அமைந்து உத்தம கத்தோலிக்க குழந்தைகட்கு ஓர் எடுத்துக்காட்டாய் அமைந்தார். தான் குருத்துவபதவியை அடையவேண்டுமென்று ஆவல்கொண்டார். இவர் தனது படிப்பை அர்ச். ஜோசப் கல்லூரியில் முடித்துத் தனது எண்ணம் நிறைவேறும்படியாக ஞானக் கல்விபயிலும் நோக்குடன் 1917-ம் ஆண்டு பெரிய குருமடத்தில் பிரவேசித்தார். 1920-ம் ஆண்டு ஒ. எம். ஐ. கூட்டத்தில் சேர்ந்த இவர் 1921-ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றார்.

### குருத்துவ சேவை

முதல் 5 வருடங்களிலும் கொட்டாஞ்சேனையில் உப கட்டளைக் குருவராகக் கடமையாற்றிய இவர் பின் வாய்க்கால் கட்டளைக் குருவராக நியமனம்பெற்றார். 1935-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நீர்கொழும்புப் பகுதிக்கு நியமனம்பெற்ற இவர், ஒருவருடம் தவிர, தனது சேவையை 1953-ம் ஆண்டு மட்டும் தொடர்ந்து நடத்தினார். இக்காலத்தில் நீர்கொழும்புக் கடற்கரைத்தெரு அர்ச். செபஸ்தியார் கோயிலைக்கட்டும் பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர் சிக்கனத்தையும் சனங்களுடைய கலையும் முன்னிட்டுக் கோவிலைப் புதுமுறையில் மாற்றியமைத்தார். இந்நாட்களே அவருடைய குருத்துவ சீவியத்தின் பொன்னாட்கள். சுகதேகியாகவும் தான் தலையிடும் கருமங்களைத் திறமாகக்கொண்டு நடத்தும் திடன் வாய்ந்தவராயுமிருந்தார். 1953-ம் ஆண்டு மார்ச்மாதத்திலிருந்து 1956-ம் ஆண்டு சற்பிரசாத சபைக் குருக்கள் வரும்வரை கொழும்பு பிலிப்புநேரியார் கோவிலிலும், அதன்பின் பிரான்சிஸ்கன் சபைச் சகோதரரின் ஞானப் போதகராக மக்கோனவிலும் கடமையாற்றினார்.

இவர் கடைசியாக இவரே சில வருடங்கட்குமுன் சிருட்டித்த தளுப்பத்தை மீசாமுக்கு வந்து சேர்ந்தார். இவர் அங்கிருந்த மூன்று வருடங்களிலும் தனது விசேட கவனத்தை றோமை, லூர்துபதிக்குச் செல்லும் இலங்கைத் தேசியயாத்திரிகர்கள்மேல் செலுத்தினார்.

### இறுதிக்காலம்

1961-ம்ஆண்டு பெப்ரவரிமாதம் சுகவீனம் காரணமாக வைத்தியசாலைக்குச் சென்றார். அதன்பின் தனது சேவையைத் தொடர்ந்து நடாத்தமுடியாமல் ஓய்வுபெற்று மக்கோனவிலுள்ள அர்ச். வின்செந்ற் விடுதிக்குச் சென்றார். அங்குசென்ற 6 மாதங்களின் [illegible]

### ஆத்மிய தொண்டு

63-ம் பராயத்தில் உயிர்துறந்த இவரின் நன்மைத்தனத்தையும், கடமைப்பாட்டையும், புத்திக்கூர்மையையும், சேவைத்திறனையும் என்னென்று பகர்வது. இவர் தனது 36 வருட குருத்துவசேவையில் கடவுளின் மகத்துவத்தைப் பாடுவதிலும் அவருடைய இராட்சியத்தைப் பரப்புவதிலும் அக்கறைகொண்டு ஓயாது உழைத்தார். இவருடைய எழுத்துத்திறமை எப்படிப்பட்டதென்பது எல்லோரும் அறிந்ததே. தன்னுடைய சகபாடிகளான ஏனையகுருக்களின் பரிகாசங்கட்கு இவர் பலியாகினாலும், இவரில் நிலவிய அமைதி அவற்றையெல்லாம் மேற்கொள்வதால் இவரைப்பரிகாசம் பண்ணுவதில் எவரும் அச்சங்கொள்வதில்லை. சுவிசேஷங்களையும், பிரசங்கங்களின் தொகுப்புக்களையும், கிறிஸ்துமதப் பாதுகாப்பு, அர்ச்சியசிஷ்டர்களின் வாழ்க்கைவரலாறு, புதியேற்பாடு, பூசைப்புத்தகம் என்பனவற்றையும் சிங்களத்தில் மொழிபெயர்த்த பெருமை இவருக்குரியதே. இவை சுயபாஷைபேசும் பாமரமக்கட்கு மட்டுமல்லாது, குருக்களுக்கும் துணைக்கருவிகளாக இருக்கின்றன. இந்நூல்கள் இவருடைய விடாமுயற்சியின் எடுத்துக்காட்டுகளாகும். இவருடைய பூதவுடல் எங்கள் மத்தியில் இப்போது இல்லாவிடினும் இவரைப் பற்றிய செய்திகளை இவர் தொகுத்த நூல்கள் வாயிலாக எதிர்நோக்கியிருக்கும் சந்ததியார் அறிந்துகொள்வர். இவருடைய சேவைக்கேற்ற சன்மானம்காத்துக்கொண்டிருக்கின்றது. இவர் சமாதானத்தில் இளைப்பாறுவாராக!

---

## பதுளை, கன்னியர் பாடசாலையில் அர்ச். ஊர்சுலா திருநாள்

அன்று சனிவாரம் பதுளை அர்ச். ஊர்சுலா உயர்தர பாடசாலை மாணவரின் புனிதப் பொன்னாள். அந்நாள் எப்போ வருமென எதிர்பார்த்தநாள். எம்பாதுகாவலி உலகிற்கு மறைந்த புனிதை. நம்தீவில் அவளை அறிந்துள்ளோர் ஒரு சிலரே என்று கூறலாம். ஆயினும் பதுளையில் அவள் நாமம் எவர் உதட்டிலும் உண்டு. எம் பாதுகாவலர் தம் கற்பையும், ஆவியையும் தேவனிடம் ஒப்படைத்தது மாத்திரம் அல்ல, பதினொரு ஆயிரம் தன் தோழியரின் கற்பையும், உயிரையும் தம் பத்தாவுக்கு ஒப்படைக்க வழிகாட்டிக் கன்னியும், வேதசாட்சியும் என்ற இரு முடிகள் பெற்றுக்கொண்ட உயர் புனிதை. என்னே, அவளைப் பாதுகாவலியாகக்கொண்ட எம் பெருமை, பாடசாலைத் தினத்தையொட்டி மிகவும்குதூகலத்துடன் விளையாட்டுப் போட்டிகள் யாவும் முடித்து நவநாட் செய்யக் காத்திருந்தோம். 12-ம் திகதி தொடக்கம் நவநாள் செய்து எம் நன்றியை எம்பாதுகாவலிக்கு ஒப்புக்கொடுத்தோம். 2-ம் திகதி சனிவாரம் 8 மணிக்கெல்லாம் எம் பாடசாலை மாணவிகள் பெருந்திரளாக வந்துகூடினர். 37 ஆசிரியர்களும் எங்களிடையே காட்சி கொடுத்தார்கள். 9 மணிக்குப் பாடசாலைக் கீதத்துடன் சங். அதிபர் அவர்களால் பாடசாலைக்கொடி உயர்த்தப்பட்டது. 9-30க்கு மோட்சவாசல்போல் அலங்கரிக்கப்பட்ட எம் மடத்து ஆலயத்தில் வண. ராசபக்ச அடிகளால் பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது. கத்தோலிக்க ஆசிரியரும், மாணவரும் [illegible] பெற்றுத் திருவிருந்தருந்தி எங்கள் பாதுகாவலி, தான் எப்படி இளம் பெண்களை ஞானவெள்ளத்தில் மூழ்கிப் பேரின்பத்தை அடையச் செய்தனளோ அந்தவித ஞான வெள்ளத்தை எமக்கும், எம் ஆசிரியர், கன்னியர்க்கும் அளிக்கும்படி வேண்டினோம். 11 மணிக்கு விருந்துபசாரம் நடத்தப்பட்டது. 12 மணிக்கு சங். தாயார், அதிபர், மற்றும் சகோதரிகள், ஆசிரியர் ஆகியோருக்கு எம் நன்றியைத் தெரிவித்து இல்லம் ஏகினோம். அன்று நாம் அடைந்த இன்பம் அளப்பரியது. 28-ம் திகதி எங்கள் பழைய மாணவிகள் கொண்டாட்டம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த இக்கட்டான நிலையில் எங்கள் விசுவாசம் அனல்போல் எரிய எங்கள் புனித பாதுகாவலி உதவி செய்வாளாக.

—லெற்றீசியா லியோன்

---


## நேயர்கள் கவனிக்கவும்

எனது கண்பரிசோதனை நிலையத்துக்குப் பக்கத்தில் "பெர்னாண்டோ" என்ற விலாசத்துடன் ஒரு நிலையம் ஆரம்பமாகியுள்ளது. அது எனது நிலையமன்று.

வி. ரி.
பெர்னாண்டோ,
பல் வைத்தியர், கண் பரிசோதகர்
11, பெரிய தெரு,
யாழ்ப்பாணம்.


---

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF MANNAR

In the matter of the intestate estate of Thangammah wife of Vaitilingam Ambalavanapillai of Karainagar, Jaffna late of Mannar.

Deceased.

Testamentary Jurisdiction } No. 855.

Doctor Ambalavanapillai Vaithilingam of Karainagar, Jaffna.

Petitioner.

Vs.

Vaithialingam Ambalavanapillai of Karainagar, Jaffna.

Respondent

This action coming on for disposal before R. Paramakuru, Esquire, Additional District Judge, Mannar on the 7th day of October, 1960 in the presence of M. M. Sultan, Proctor on the part of the petitioner; and the affidavit and petition of the petitioner having been read:

It is ordered that the petitioner be and he is hereby declared entitled to have letters of administration to the estate of the deceased abovenamed as sole heir and son unless the respondent abovenamed or any other persons concerned shall on or before the 2nd day of May, 1961 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 7th day of March, 1961.
Sgd. **T. J. Rajaratnam,**
Addl. District Judge

2-5-61.
Extended and reissued for 13-6-61.
Sgd. **K. Sinnathamby,**
Addl. District Judge.

13-6-61.
Extended and reissued for 11-7-61.
Sgd. **K. Sinnathamby,**
Addl. District Judge.

11-7-61.
Extended and reissued for 22-8-61.
Sgd. **T. J. Rajaratnam,**
Addl. District Judge.

22-8-61.
Extended and reissued for 5-10-61.
Sgd. **T. J. Rajaratnam,**
Addl. District Judge.

3-10-61.
Extended and reissued for 14-11-61.
Sgd. **T. J. Rajaratnam,**
Addl. District Judge

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச்செய்திகள்

## கல்லூரிப் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா ஐப்பசி 31-ந்திகதியாகிய சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6மணிக்கு மகாவந். மேற்றிராணியாண்டவர் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகிச் சம்பிரமமாக நடந்தேறியது. கொழும்பு ஆர்ச்டீக்கன் கனம். சி. எச். டபிள்யு டி சொய்சா, எம். ஏ. (ஒக்ஸன்) அவர்கள் பிரதம விருந்தாடியாகச் சமுகமளித்திருந்தார். கல்லூரிக்கீதம் படிக்கப்பட்டபின் அதிபர் சுவாமிகளால் வருடாந்த அறிக்கை படிக்கப்பட்டதும் பிரதம விருந்தாடி அவர்கள் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி ஆழ்ந்தகருத்துக்கள் அமைந்த அரியதோர் உரைநிகழ்த்தினர். ஈற்றிலே மாணவர்களால் அழகாக நடிக்கப்பெற்ற ஒருநாடகத்துடனும், கதம்பக் கச்சேரியுடனும், பாப்பாசர்கீதத்துடனும் பரிசளிப்புவிழா நிறைவாயிற்று.

## செனற்சபை ஸ்தானங்கள்

30அங்கத்தவர்களைக் கொண்டுள்ள செனற்சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது 21ஸ்தானங்களையும், தடைசெய்யப்பெற்ற தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களாய்ச் செனற்றர் ஜி. நல்லையா, செனற்றர் எம். மாணிக்கம் என்பவர்கள் இருஸ்தானங்களையும், ஐக்கிய தேசியக்கட்சி டக்றர் எம். வி. பீ. பீரிஸ் மூலம் ஒரேயொரு ஸ்தானத்தையும், லங்கா சமசமாஜகட்சி இருஸ்தானங்களையும் வகித்திருக்கின்றன. தற்போது எதிர்க்கட்சியில் எட்டுச்செனற்றர்களே இருக்கின்றார்கள்.

## இந்திய-இலங்கை வர்த்தகம்

இந்தியாவுக்கும், இலங்கைக்குமிடையே முதன்முறையாக ஒருவர்த்தகஒப்பந்தம் சென்ற சனிக்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன்விளைவாய் இலங்கையிலிருந்து தேங்காயெண்ணெய், கொப்பரு, தின்புகையிலை, றப்பர் ஆகியவைகளை ஏற்றுமதிசெய்வதிலும், இந்தியாவிலிருந்து பீடி, கருவாடு, புளி, பனங்கட்டி, கைத்தறி நெசவுபுடவை ஆகியவைகளை இறக்குமதிசெய்வதிலும் ஏற்படும்சங்கடங்கள் குறையுமென்று ஒப்பந்த பேச்சுவார்த்தைகளின்பின் வெளியானகூட்டறிக்கை தெரிவிக்கின்றது.

## புளியும் சர்க்கரையும்

சனப்பிரதிநிதிகள்சபையிலே சென்ற வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அவர்கள் எழுந்து: புளியின் இறக்குமதி தடைசெய்யப்பட்டமையாலே இலங்கையில் ஒருஇடத்திலும் புளி பெறமுடியாதிருக்கிறது; அது மக்களின் அவசிய தேவைக்கு வேண்டியது; கிடைக்கக்கூடியபுளியும் அதிகம்கூடியவிலைக்கே கிடைக்கிறது; ஆகவே, புளியைஇறக்குமதிசெய்ய உடனடியாக அனுமதிக்க வேண்டும்; வேண்டிய அளவுக்குச் சர்க்கரையும் இறக்குமதிசெய்யப்படவேண்டும்; இது உணவுப்பொருள் மட்டுமின்றிக் கோயில்தேவைக்கும் வேண்டியதென்று பேசிக்கொண்டிருக்கையில் நிதிமந்திரி குறுக்கிட்டுப் புளி, சர்க்கரை ஆகியவற்றின் இறக்குமதித்தடை நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

## நியமன செனற்றர்கள்

பண்டிற் ஜி. பி. விக்கிரமாராச்சி, திரு. சி. டி. எஸ். சிறிவர்த்தன, திரு. எஸ். டி. எஸ். சோமரத்ன, திரு. ஆர். எல். ஏ. ஐ. கரணகொடா, திரு. ஈ. சி. ரி. லபுறூய் எனும் ஐவரும் புதிய நியமன செனற்றர்களாகக் கவர்னர்-ஜெனறலாலே நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறார்கள்.

## யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

நீதியரசர் டக்றர் தம்பையா அவர்களால் சென்றஆடிமாதமுதல் விசாரணை செய்யப்பட்டுவந்த யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு சென்றவியாழக்கிழமையன்று முடிவடையலாயிற்று. இதிலே கடைசியாகப் பலாலியைச் சேர்ந்த சிவலிங்கம் இராசரத்தினம்என்பவர் வைரவன்முத்துவைக் கொலைசெய்தாரென்ற குற்றச்சாட்டின்பேரிலே இரண்டுவருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்படலாயினர்.

## திருகோணமலைத் துறைமுகம்

திருகோணமலைத் துறைமுகத்தை மீன்பிடி துறைமுகமாக அபிவிருத்தி செய்வதென்று கடற்தொழில் ஆலோசனைச்சபை தீர்மானித்திருக்கிறது. திருகோணமலை, காலி, காங்கேசன்துறையாகிய மூன்று துறைமுகங்களிலும் மீன்பிடி துறைமுகமாக அபிவிருத்திசெய்வதற்குத் திருகோணமலைத் துறைமுகமே சிறந்ததென முடிவுசெய்யப்படலாயிற்று. அதனால் ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கும், பிடித்தமீன்களைச் சேமித்து வைப்பதற்குமான வசதிகளை அங்கே செய்துகொடுப்பதெனக் கடற்தொழில் ஆலோசனைச்சபை முடிவுசெய்துள்ளது.

## தெரியப்பெற்ற செனற்றர்கள்

சனப்பிரதிநிதிகள்சபைக் கூட்டத்திலே சென்றவியாழக்கிழமை திரு. எம். மாணிக்கம் (த. அ. க.), டக்றர் எம். வி. பி. பீரிஸ் (ஐ. தே. க.), திரு. வீரா விமலரத்ன (ல. சு. க.), திரு. ஆனந்தா தசநாயக்கா (ல. சு. க.), திரு. ஏ. பி. ஜயசூரியா (ல. சு. க.) எனும்ஐவரும் புதிய செனற்றர்களாகப் போட்டியின்றிக் கட்சிப்பிரிவாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

## அரிசிப்புத்தகமும் விதானைமாரும்

மக்களுக்கு அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் வழங்குதல், கணக்கெடுப்புநடத்துதல் ஆகியவற்றிற்கென இதுவரை கிராமவிதானைமாருக்குக் கொடுபட்டுவந்த விசேஷவேதனம் அவர்களிடமாக இனிவரப்போகும் கிராமசேவகர்களுக்குக் கொடுபடமாட்டாது. இந்த விசேஷசம்பளத்தை நிறுத்துவதாலே வருடமொன்றுக்கு அரசாங்கத்துக்கு நாற்பதுஇலட்சம்ரூபா மிச்சம்ஏற்படுமென்று உள்நாட்டு மந்திரிகாரியாலயம் மதிப்பிடுகின்றது. அடுத்தவைகாசி மாதத்திலே கிராமசேவகர்கள் நியமனஞ்செய்யப்படவிருக்கிறார்கள்.

## பழுதடையும் பஸ்கள்

பஸ்சேவை தேசியமயம் ஆக்கப்பட்டபின் ஒருகோடிரூபாசெலவில் இலங்கைப் போக்குவரத்துச்சபை வாங்கிய 1,400பஸ்களில் அநேகம் இப்போது பழுதடையத் தொடங்கிவிட்டன. பஸ்சேவை தேசியமயமானபோது தனிப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து போக்குவரத்துச்சபை எடுத்துக்கொண்ட 3,290பஸ்களில் தொளாயிரம்பஸ்கள் ஓடமுடியாத நிலைமையிலே இன்னும்கறேஜ்களில் கிடக்கின்றன. ஒருபஸ்ஸைப் பழுதுபார்த்து வெளியே அனுப்பும்போது இரண்டு பஸ்கள் பழுதடைந்து கறேஜ்களைப் போய் அடைகின்றன. இன்னும் பழுதடையும்பஸ்களை உடனுக்குடன் பழுதுபார்த்தனுப்ப முடியாதநிலைமையிலே போக்குவரத்துச்சபையின் எஞ்ஜினியறிங்பகுதி இருந்துவருகிறது.

## திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம்

தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இன்று சனிக்கிழமை கொழும்புவந்து சேரவிருக்கின்றார். லண்டனிலிருந்து கப்பல்மார்க்கமாகப் புறப்பட்ட இவர் நேரே பம்பாய்வந்து, அங்கே இருதினங்கள் தங்கியபின் 'எயர் இந்தியா' விமானமூலம் இன்று சாயந்தரம் கொழும்பு வந்து சேருவார்.

## புதிய தொழில்மந்திரி

செனற்றர்சாத் விஜயசிங்கா செனற்சபைத்தலைவராகத் தெரியப்பட்டமையாலே தொழில்-தேசியசேவைப் புதிய மந்திரியாகத் திரு. எம். பி. டி ஸற் சிறிவர்த்தன நியமனஞ்செய்யப் பட்டுள்ளார். இதுவரை இவர் உதவித்தொழில்-தேசியசேவை மந்திரியாக இருந்துவந்தார்.

## செனற்சபைத் தலைவர்

செனற்சபையின் புதியதலைவராகத் தொழில-தேசியசேவை மந்திரியான செனற்றர்சாத் விஜயசிங்கா சென்ற செவ்வாய்க்கிழமை ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பட்டிருக்கின்றார். அங்ஙனம் தெரியப்பட்டமையால் அவர் தனது மந்திரிபதவியை இராசினாமாச் செய்யலாயினர். செனற்சபை உபதலைவராகச் செனற்றர் பி. எச். தனுவிலையும், எதிர்க்கட்சித்தலைவராக லங்கா சமசமாஜ கட்சியைச்சேர்ந்த செனற்றர் டொறிக் டீ சூஸாவும் தெரியப்பட்டிருக்கின்றனர்.

## பண்டாரநாயக்கா கொலைவழக்கு அப்பீல்

பண்டாரநாயக்கா கொலைவழக்கிலே மரணதண்டனை விதிக்கப்பட்ட மாபிட்டிகம புத்தரக்கித்த, எச். பி. ஜயவர்த்தன, தல்துவே சோமராமஎனும் மூவரினதும் அப்பீல்மனுக்கள் சென்ற திங்கட்கிழமை காலை 11மணிக்குக் கொழும்பிலே கிறிமினல் அப்பீல்கோட்டில் ஐந்துநீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. பிரதமநீதியரசர் திரு. எச். எச் பஸநாயக்கா, கியூ. சி., திரு. சன்சொனி, திரு. எச். என. ஜி. பெர்னாண்டோ, திரு. சின்னத்தம்பி, திரு. எல். பி. டி சில்வா என்பவர்களே ஐந்துநீதியரசர்களுமாவர். எதிரிகள்மூவரும் கோட்டில் சமுகமாயிருக்கவில்லை.

## விபத்தில்இறந்த பிக்குகள்

18 புத்தபிக்குகள்உட்பட 48பேரைக் கொண்ட கோஷ்டிஒன்று இந்தியாவிலுள்ள புத்ததலங்களுக்கு யாத்திரை சென்று வரும்போது, வடஇந்தியாவைச்சேர்ந்த உத்தரப்பிரதேஷ் இராச்சியத்திலே புதுடில்லியிலிருந்து 200 மைல் தூரத்திலுள்ள பாரூகாபாத்எனுமிடத்தில் அவர்கள் பிரயாணஞ்செய்த புகையிரதம் சென்றசனிக்கிழமைகாலை தடம்புரண்டு விபத்துக்குள்ளானபோது பிரயாணிகளில் 19பேர் மரணமடைய, 61பேர் காயமடைந்தார்கள். மரணமடைந்தவர்களில் 16பேரும்முன்சொன்ன யாத்திரைக்கோஷ்டியில் கலந்துசென்ற புத்தபிக்குகளே. இந்த விபத்தில் மரணமடைந்தவர்களும் இந்தப் பிக்குகள் மாத்திரமே. காயமடைந்தவர்களிலும் 30பேர் இலங்கைப் புத்தயாத்திரிகர்களே. இவர்களெல்லாம எஞ்ஜினையடுத்த இரண்டாம்வகுப்புப்பெட்டியில் பிரயாணஞ் செய்தார்கள். இறந்த 16 பிக்குகளினதும் சடலங்கள்சென்றபுதன்கிழமை விமானமூலம் கொழும்புக்குக் கொண்டுவரப்படலாயின.

# வெளிநாட்டுச் செய்திகள்

● சோவியற்ருஷியா வானவெளியிலே சென்ற 25-ந்திகதியும், 27-ந்திகதியும் மற்றும் இரு அணுக்குண்டுகளை வெடிக்கவைத்துப் பரீட்சித்திருப்பதாக அமெரிக்க அணுச்சக்திக் கமிஷன் அறிவித்திருக்கிறது. இவைகள் 50 மெகதொன் அணுக்குண்டிலும சிறியனவாகும். ருஷியா பரீட்சித்துள்ள 24-ம், 25-ம அணுக்குண்டுகள் இவைகளாகும்.

● இந்தியபிரதமர் நேருஅவர்கள் மூன்றுமமுறையாக நாளை 5-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை திருமதி இந்திரா காந்திசமேதராய் ஐக்கிய அமெரிக்க தேசத்திற்கு விஜயஞ்செய்யவிருக்கிறார். அத்தேசத்திற்கு விஜயஞ்செய்யும் உலகதலைவர்களுக்கு அளிக்கப்படும் சகலமரியாதைகளையும் இவருக்கு அளிப்பதற்கான ஏற்பாடுகள் வாஷிங்ரன் நகரிலே செய்யப்பட்டிருக்கின்றன.

● ஜப்பான்முழுவதும் சென்றவெள்ளிக்கிழமை கதிர் இயக்கம் காணப்பட்டதென்றும், ருஷியா வெடிக்கவைத்துள்ள பாரிய அணுக்குண்டினாலேயே இந்தக்கதிர்இயக்கம் பரவியதென்றும், சிலதினங்களிலே அது இன்னும் அதிகரிக்குமென்றும் ஜப்பானிய வானிலை ஆராய்ச்சிநிலையம அறிவித்திருக்கிறது.

● தற்சமையம் சோவியற்ருஷியா நடத்திவரும் அணுக்குண்டுப் பரீட்சைகள் உலகமக்களை எச்சரிப்பதற்கேயென்றும், அணுயுத்தத்தால் மனிதவர்க்கம் போராபத்துக்கு இலக்காகாமல தடுப்பதே அப்பரீட்சைகளின் நோக்கமென்றும் சோவியற்பிரதமர் குருஷேவ் கானநாட்டின் ஐனாதிபதிக்கு எழுதிக் காரணம்தெரிவித்திருக்கிறார்.

● அணுஆயுதப்பரீட்சையில் அமெரிக்காவுக்குத் தாம்பின்தங்கியிருப்பதாக உணர்ந்தமையால்தான் சோவியற்ருஷியா அணுக்குண்டுப் பரீட்சைகளை நடத்திவருகிறதென்றும், சென்ற 24-ந்திகதி அது வெடிக்கவைத்த அணுக்குண்டு 30மெகதொன்னயிருக்கக் கூடுமென்றும் பிரித்தானிய பாராளுமன்றத்தில் அதன் பாதுகாப்புமந்திரி தெரிவித்திருக்கின்றார்.

● சோவியற்ருஷியா சென்ற 31-ந்திகதி செவ்வாயன்று தனது 50மெகதொன் அணுக்குண்டை வெடிக்கவைத்ததாக லண்டனிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. மனிதன் இதுகாலவரை தயாரித்துள்ள மகாப்பிரமாண்டமான அணுக்குண்டு இதுவாகும். இது வடதுருவப்பகுதியிலுள்ள நோவாயா ஜெமிலயா எனுமிடத்தில் வெடிக்கவைக்கப்படலாயிற்று. ருஷியாவின் முந்திய அணுக்குண்டுப் பரீட்சைகள் எதையும்விட இது நான்குமடங்கு அதிகமான அதிர்ச்சியை உண்டுபண்ணியதாம்.

● சோவியற் இராட்சத அணுக்குண்டு வெடிக்கவைக்கப்பட்டிருப்பதானது "மனிதவர்க்கம் முழுவதையும் எதிர்த்துச் செய்யப்பட்ட ஒருயுத்தபிரகடனமென்றும், எதிர்கால சந்ததியார் மீதுவிதிக்கப்பட்ட ஒருமரணதண்டனையென்றும் இந்தியபாராளுமன்ற எதிர்க்கட்சியாகிய பிரஜாசோஷலிஸ்தகட்சி தெரிவித்துள்ளது.

● மொத்தமாக 50மெகதொன் நிறையுள்ள அணுக்குண்டுகள் அமெரிக்க குண்டுவீசும் விமானங்களில் ஏற்கனவே இருந்துவருகின்றனவென்றும் நினைத்தநேரத்திலே நினைத்தவிடத்தில் அவைகளைப் போடமுடியுமென்றும் ஆசியாவிலுள்ள அமெரிக்க உயர்தர அதிகாரிகள் உறுதிகூறியுள்ளார்கள்.

● பீ-5என்ற அமெரிக்க குண்டுவீசும் விமானங்களின் இருஇறக்கைகளின்கீழும் ஒவ்வொன்றும் 25மெகதொன்நிறையுள்ள இருஅணுக்குண்டுகள் எப்பொழுதுமே தயாராகஇருந்துவருவதாய் அமெரிக்க பாராளுமன்றத்திலே ரெக்சாஸ்நாட்டின் பிரதிநிதியான திரு. அதர்போர்ட் ஒடிஸா வாஷிங்டனிலிருபரிடம்சென்றதிங்கட்கிழமை தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### கார்த்திகை மாதம் — 1961

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | ஞா. | 2 | **பெந்தெக்கோஸ்தின்பின் 24-ம்ஞாயிறு** | (வி. ம) | ப. |
| 6 | தி. | | காலதினம் (ஞாயிறு பூசை) | | ப. |
| 7 | செ. | ம | காலதினம் ( ,, ,, ) | | ப. |
| 8 | பு. | ம | காலதினம் ( ,, ,, வேதசாட்சிமுடிபெற்ற நால்வர் ஞா) | | ப. |
| 9 | வி. | 2 | **இரட்சகரின் மகாலய அபிஷேகதினம்** (அர்ச். தொயடோர் ஞா) | (வி. ம) | வெ. |
| 10 | வெ. | | அர்ச். அவெல்லீனி பெலவேந்திரர் (அர்ச். திரிபோன் தோழர் ஞா) | | வெ. |
| 11 | ச. | | அர்ச். மார்த்தீனுர் (அர்ச். மென்ஞ ஞா) | | வெ. |

**சத்திய வேத**

**பாதுகாவலன்**

**1961-ம் ஆண்டு**

**கார்த்திகைமாதம் 4-ந்திகதி**

## தகுந்த அறிவுரை

எமதுநாட்டில்வாழும் பல்வேறு சாகியத்தினரும், சமயத்தினரும் சமரசமனப்பான்மையுடன் வாழ வேண்டும்; நானு சாகிய—சமய மக்களிடையே ஒற்றுமைநிலவினுல்தான் எமது பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தகுந்த சூழ்நிலை ஏற்படும்; இனபேதம், மதபேதமில்லாது மக்களெல்லோரும் கைகோத்துக்கொண்டு நாட்டின்பொருளாதார அபிவிருத்திக்காக ஒத்துழைக்கமுற்படுவார்களானுல் பாலும்தேனும் பொழியத்தகுந்த வளம்பொருந்தியதாக எமதுநாட்டினை ஆக்கிவிடலாம்; இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டுள்ள சகல இன, மத சமூகங்களைச் சேர்ந்தவர்களும் சகோதரங்களாகவாழக் கற்றுக்கொள்ளாத பட்சத்திலே எமதுநாடு சுபீட்சம் எய்துவது இயலாக்கருமமென்று காலந்தோறும் அரசியற்தலைவர்களும், மற்றும் பொதுநலப்பிரியர்களும், மனந்தாழமாட்டாது கூறி வந்தபோதிலும் காரியம்எதுவுமே கைகூடுவதாயில்லை. ஐக்கிய இலங்கையை உருவாக்குவோம், வாரீரென்று பலரும் அறைகூவுவதெல்லாம்—அபயமிடுவதெல்லாம் செவிடன்காதில் சங்கநாதஞ்செய்த வாருகவேயிருக்கின்றது.

இந்தநிலைமையிலே அன்று தமது அத்தியட்சாதிகார ஸ்தானசங்கத்திலே கொழும்பு, அங்கிளிக்கன்சபை பிஷப் மகாகனம். கிறஹம் — காம்பெல்அவர்கள் உரைநிகழ்த்திய போது: "தேசியவாழ்க்கையிலே அத்துணையு மனக்கசப்புக்கும், கொந்தளிப்புக்கும் வழிபண்ணிய சமீபகாலநிகழ்ச்சிகள் சிலவற்ருலே இந்நாட்டில் பற்றுக்கொண்டுள்ள அனைவருமே கவலையடைந்திருப்பார்கள்; தங்களுக்குஇழைக்கப்பட்டுள்ள அநீதிபற்றிய உணர்ச்சியாலும், தங்களுக்குண்டான தோல்விபற்றிய உணர்ச்சியாலும், தங்களது சொந்தக்கலாசாரத்தை மாத்திரமல்ல, ஆனுல், எதிர்காலத்திலே நாட்டின் வாழ்க்கையில் தங்களுக்குரிய பூரண பங்கைஎடுக்கும் சந்தர்ப்பத்தையுமே இழப்பதாகிய அச்சத்தாலும் உளம்நொந்து வருந்துவோரான அநேகர் இந்நாட்டில் இருக்கிறுர்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

"சட்டமும், ஒழுங்குமின்றி உண்மைச்சுதந்திரம் இருக்கவே முடியாது; ஆகவே, சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவது மாத்திரமல்ல, சட்டமும் மதிப்பைப்பெறக் கூடிய நிலைமைகளை உருவாக்குவதுமாகியகடமை சுமத்தப்பட்டுள்ள அரசாங்கத்தின்மீதுள்ள பொறுப்பை எவ்வும்மகுறைவாக மதிப்பிடலாகாது; சமீபகால நிகழ்ச்சிகளினுலே சிதைந்துபோன ஐக்கியத்தைத் திரும்பவும் கொண்டுவர வகைதேடுவதும், புண்பட்டபலருடைய உள்ளக்காயங்களை ஆற்றிப் பரிகரிப்பதற்கான முயற்சியெடுப்பதுமான முதற்பொறுப்பு அதிகாரம்வகித்திருக்கும் அரசாங்கத்திடமே இருக்கவேண்டுமென்பதில் சந்தேகமில்லை.

ஆயினும், இதுவிஷயமாய் உண்மையாகவே சகலஅரசியற்கட்சித் தலைவர்கள்மீதும் உள்ளபடியே மற்றவர்கள்மேல்—அதாவது சாகியமோ அன்றேல்சமயமோ எதுவாயிருப்பினும் நல்மனமுள்ள அனைவர்மேலும் தங்கள்செல்வாக்கைச் செலுத்தக்கூடிய எல்லார்மீதும் உண்டானபொறுப்பும் குறைந்ததல்ல" என்று அவர்கூறியிருக்கின்றுர். சாகியபேதமற்ற ஒருசமயத்தின் தலைவரென்றமட்டிலே அவர்கூறியுள்ளவைகள் அரசினருக்கும், அரசியற்கட்சிகளின் தலைவர்களுக்கும், மற்றும்பிரமுகர்களுக்கும் ஒருதகுந்தசந்தர்ப்பத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ள அறிவுரைகளாகும். அரசாங்கம் சாதிசமய பாகுபாடின்றியே மக்களுக்கு உதவிபுரியுமென்றும், அது ஒருபோதும் மதங்களையோ, இனங்களையோ, மொழிகளையோ பாதிக்கக்கூடியவகையில் நடந்துகொள்ள மாட்டாதென்றும் மந்திரிஒருவர் பகருகின்றுர். ஆனுல், ஒருஜனநாயகநாட்டிலே அரசாங்கம் சகலசமூகங்களையும் ஒரேமாதிரியாய்ச் சுமுகமாக நடாத்தவேண்டும்; ஆனுல். இந்நாட்டிலே தமதுசாகியம் மாற்ருந்தாய்மாதிரியிலே நடத்தப்படுகின்றதென்று எம். பி. ஒருவர் மொழிகின்றுர். எமதுநாட்டின் இன்றையநிலைமையைக் கூர்ந்து அவதானிக்கும்பொழுது பழையஏற்பாட்டிலே எகிப்தியர், இஸ்ருயேலர் வரலாறுகள் நமதுஞாபகத்தில்வருவது ஆச்சரியமல்ல.

---

● பரிசுத்தபிதா அருளப்பபாப்பரசர் தாமபாப்புவின்சிம்மாசனத்திற்குத் தெரிவுசெய்யப்பெற்ற மூன்ருவது ஆண்டுநிறைவைக் கொண்டாடுமுகமாகச் சென்றசனிக்கிழமை தமதுபிரத்தியேக சிற்ருலயத்திலே ஒருதேவதோத்திரபூசை நிறைவேற்றினுரென்றும், மறுநாள் உருமத்தின்போது வத்திக்கான்மாளிகையின் மூன்ருவதுமேன்மாடிச் சன்னலில்நின்று கீழேகாத்துநின்ற சுமார் பதினுயிரம்மக்களுக்குத் தமது ஆசிவழங்கினுரென்றும் வத்திக்கானிலிருந்து தந்திச்செய்தி கிடைத்திருக்கிறது.

* * *

● பரிசுத்தபாப்பரசர் திருமுடி சூடிய மூன்ருவது ஆண்டு நிறைவுவிழாவிலும், அவரின் 80-வது ஜனனவிழாவிலும கலந்துகொள்ளுமாறு தேசியசீனுவின் ஜனுதிபதி சியாங்-கை-ஷெக் அவர்கள் தமதுஅரசாங்க வெளிநாட்டுமந்திரி ஷென்ஷாங் ஹுவாங்கைத் தமது விசேடதூதுவராக வத்திக்கானுக்கு அனுப்பியிருரெனத் தைப்பேநகரிலிருந்து தந்திச்செய்தி எட்டியிருக்கிறது.

# இஸ்பிரீத்துசாந்து திருநாளுக்குப் பின்வரும் 24-ம் ஞாயிறு

— வண. மைக்கல் ரொட்றிக்கோ சுவாமிகள் —

தமிழாக்கம்: "தமிழ்க் கழகம், லங்காமாதா குருமடம், கண்டி.

**இன்றைய பூசையின் சாரம்:** இன்றைய பொருள் கிறிஸ்துவே முழு இயற்கைக்கும் தேவன்

**பிரவேசவாக்கியம்:** இன்றைய பிரவேசவாக்கியம் ஜெரேமியாஸ் 29-ல் இருந்து எடுக்கப்பட்டது. இது ஏழைச்சம்மட்டிகளாகிய அப்போஸ்தலர்களின் துன்பதுரிதங்களைப் பற்றி நினைப்பூட்டுகின்றது. அவர்கள் தாங்கள் அவலப்படும் நேரத்தில் ஆண்டவரைப் பார்த்துக் கூப்பிட்டார்கள். "ஆண்டவரே எங்களைக் காப்பாற்றும். நாங்கள் சிதைந்து போகிறேம்." ஆண்டவர் அவர்கள் மத்தியிலும், அல்லற்படும் அவர்கள் இருதயங்களிலும் அமைதியையும், சமாதானத்தையும் அளிக்கின்றுர். அவரின் சிந்தனைகளெல்லாம் சமாதானத்தின் சிந்தனைகளே. இயற்கையின் அடிமைகளாகிய நாங்கள் இயற்கையின் இன்னல்களிலிருந்து, சுபாவத்துக்கு மேலானவைகளின் எதிரிகளின் வஞ்சகத்திலிருந்து விடுதலையாக்கும்படி அவரைக் கேட்போமாக.

**சபைச் செபம்:** எங்களுடைய பாவத்தினுல் வரும் துன்பங்களை மேற்கொள்ள ஆத்துமசரீரத்துக்குத் தக்க தைரியத்தை அளிக்கும்படி வேண்டுகின்றது.

**நிருபம்:** ரோமருக்கு எழுதிய கடிதத்தின் இப்பாகத்தில் தனிச்சிறப்பாகப் பவுல் அப்போஸ்தலர் பிறர்சிநேகத்தைப்பற்றிக் குறிக்கின்றுர். நாங்கள் எல்லோரும் இந்தப் புண்ணியத்துக்கு எதிராகவரும்சோதனைகளை வெற்றிகொள்ளும்படி முன் எச்சரிக்கை கொடுக்கின்றுர். இது எங்கள் வாழ்க்கையின் அட்டவணைபோல் தோன்றுகின்றது. எனவே, இதை நாங்கள் நிறைவேற்றினுல் எங்களுடைய அல்லற்படும் ஆத்துமத்துக்கு ஆறுதலும் வெதுவெதுப்புள்ள எங்கள் பிறர்சிநேகம் சுறுசுறுப்புள்ள நிலைக்கும் மாறிவிடும்.

**சுவிசேஷம்:** அப்போஸ்தலர்களைப்போலவே நாங்களும் துன்பதுரிதவேளைகளிலே எங்கள்மேல் பராமுகமாய் இருக்கிறவரைப்போல் தோற்றும் தேவனைத்தட்டி எழுப்புகிறேம். எங்களுடைய பயங்களைக்குறைத்து, புயலை அமைதிப்படுத்திக்கொந்தளிக்கும் கடலிலிருந்து துறைமுகத்துக்கு இட்டுச்செல்லும்படி அவரை மன்ருடும்பொழுது, எங்கள் கபடின்மை அப்போஸ்தலர்களிலும் பார்க்கக் குறைந்ததல்ல. எனவே, நாம் விசுவிசுவாசத்தில் விருத்திபெற அவரை வேண்டுவோமாக நாம் எப்பொதும் விசுவாசப் பெருக்குள்ளவர்களாய்க் கடவுள் எப்போதும் நம்மோடு இருக்கிறுர்என்பதை அறிந்துகொள்ளுவோம். இதுவே எம்மனுவேல் என்பதன் அர்த்தமாகும்.

**ஆரோகணகீதமும் அல்லேலூயாகீதமும்:** இவை எங்களைத் துன்பப்படுத்துகிறவர்களிடம் இருந்து காப்பாற்றி நாங்கள் துயரப்படும் நேரங்களில் உடன் உதவிபுரிந்துவரும் யேசுவுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றன.

**காணிக்கை.** கிறிஸ்துவே கடவுளின் அதிகாரம், அவரே பிதாவின் வலதுபக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நேசகுமாரன். இந்த அதிகாரம்தான் உண்டாக்குவதும் அழிப்பதுமாகும். இந்தக் காணிக்கைச்செபம் மோட்சராட்சியத்தின் பூர்த்தியைக் காத்திருக்கும் இத்தருணத்துக்குத் தகுந்தது. அப்பொழுது மனுமகன் கடைசிநாளில் தன்னுல் நேசிக்கப்பட்டவர்களைப் பிதாவினிடம் அழைத்துக்கொண்டுபோகவருவார். கடவுளே எங்கள். முழுப்பலம். ஆகவே, அவரை அண்டிப்போவோமாக.

**தேவவசீகரம்:** ஆழ்ந்த மௌனத்தின்பின் தொடர்ந்துவரும் வசிகரப் பகுதியில் எங்களுடைய ஆத்துமத்தில் வியப்புக்குரிய காரியங்களைச் செய்யும்படி தேவனிடம் கேட்போமாக.

**பலிவிருந்துக்கு ஆயத்தம்:** நாங்கள் குருவானவரோடு ஒன்றுசேர்ந்து பரமண்டலமந்திரத்தைச் சொல்லுவோம். ஏனெனில், நாங்கள் இயற்கையின் தேவனைப்பெற்றுக்கொள்வதற்கு இதுவே தகுந்த செபமாகும். இதனுல் நாம் செபத்தின் அவசியத்தைப்பற்றி அறிந்துகொள்ளக் கடவோம்.

**அனுபவிப்புப் பகுதி:** நாங்கள் எல்லோரும் இவ்வுலக அன்பைவெறுத்துப்பரலோக அன்பைத் தேடவும் அதைக் கண்டடையவும் உதவி செய்யும்படி தேவனிடம் மன்ருடுவோமாக.

---

### விஞ்ஞானியான மேற்றிராணியார் அர்ச்சியசிஷ்டபட்டம் பெறலாம்

17-ம் நூற்ருண்டில் வாழ்ந்தவரும் டென்மார்க்கைச் சேர்ந்தவரும், விஞ்ஞானியுமான நெல்ஸ் ஸ்ரென்சன் மேற்றிராணியாருக்கு முத். பட்டம் சூட்டுவதைத் தீவிரிப்பதற்கான நடபடிக்கையெடுக்க, தூறின் கருதினுல் பொஸ்சாட்டியும், பொலோஞ்ஞா கருதினுல் லொகாரோவும் முடிவு செய்திருக்கிறுர்கள். எதிரேவரும் வத்திக்கான் சங்கம் கிறிஸ்துவ ஒற்றுமையை உண்டாக்க எடுக்கும் முயற்சியை முன்னிட்டு இது தகுதியெனக் கருதுகின்றனர்.

ரென்சன் மேற்றிராணியார் கொப்பன் ஹேகனில் 1638-ல் பிறந்தார். லுத்தரன் மதத்தைக் கைக்கொண்டார். இவர்கணிதத்திலும், புவியியலிலும், பூர்விக உயிரின ஆராய்ச்சியிலும், உடற்சாஸ்திரத்திலும் வித்துவானுய் விளங்கினுர். 1667-ல் சத்திய வேதத்தைத்தழுவி, 1675-ல் குருவாகி, 1677-ல் மேற்றிராணித்துவ அபிஷேகம் பெற்றுர். 1681-ல் காலஞ்சென்ற இவருடைய உடல் புளோறன்சில் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

### கோயில் முகப்பில் மதில் கட்டப் பார்த்தனர்

நூற்றிநாற்பது ஆண்டுகளுக்குமுன் கார்டிவ் (உவெல்ஷ்) நகரத்தில் 4 கத்தோலிக்கர் மாத்திரமிருந்தனர். இப்பொழுது 30,000 கத்தோலிக்கர். இத்தலைப்பட்டணத்தில் உளர். ஆலயமொன்றை நாற்சந்தியில் கட்டமுயன்றபொழுது அப்பட்டணத்தார் வீதியமைப்பை மாற்றிவிட்டனர். அவ்வேளை நிலச்சுவான் பியூட்பிரபு துணைசெய்தார். 10 ஆண்டுகளுக்குப்பின் கோயிலை மறைத்து எதிரே மதிலொன்று கட்டமுயன்றபோது அதே பிரபு கத்தோலிக்கருக்கு உதவி செய்ய முன்வந்தார்.

தற்பொழுது உபயோகத்திலிருக்கும் அர்ச். இராயப்பர் கோயிலுக்கு அத்திவாரமிடும்வேளை கத்தோலிக்க பெண்மணிகள் துப்பட்டியணிந்திருக்கும் காட்சியைப் பார்க்க அவ்வூரார் திரண்டுவந்தனர். அவ்வேளை அவர்கள் கூறிய குறிப்புரைகள் எல்லாம் பாராட்டாய் இருக்கவில்லை. இவ்வாலயம் நூற்ருண்டு விழாவைக்கண்டு கழித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த தந்தையின் பணியாளர்

## காலணிகள் தயாரிப்போர்

### சப்பாத்துத் தொழிற்சாலை

வத்திக்கானிலுள்ள சப்பாத்துத் தொழிற்சாலை சிறியதாயினும் உலகப் புகழ்பெற்றது. அதன் நிரந்தர வாடிக்கையாளரில் 52கோடி கத்தோலிக்கரின் ஆன்மீகத்தலைவரான பரிசுத்த பாப்பரசரே முதலிடம் வகிக்கின்றார். இத் தொழிற்சாலையின் அதிபர் அறுபத்தொருவயதான ரெலாஸ்போரே கார்போனி என்ற இத்தாலியராவர்.

பரிசுத்த வைபவங்களின்போது பாப்பரசர் வெண்ணிறச் சற்றினில் பொன் வேலைப்பாடுடனமைந்த சப்பாத்துகளைத் தரிப்பார். பகிரங்க வைபவங்களிலும், பேட்டிகளருளும்போதும் செந்நிற வெல்வெட்டில் பொன்னணிகளுடனமைந்த பாதரட்சைகள் அவர் பாதங்களை அலங்கரிக்கும். வத்திக்கான் மாளிகைக்குவெளியே செல்லும் போதும், பூங்காவில் உலாவும்போதும் சிவப்புத்தோலாலான காலணிகளை உபயோகிப்பார். திருச்சபைத் தலைவர் அணியும் காலணிகள் எவ்வகையினதாயினும் அவை வத்திக்கானில் புனித இஜிடியல் கட்டடத்தில் அமைந்துள்ள கார்போனியின் காலணித்தொழிலகத்தில் தயாரிக்கப்பட்டவையே.

### மூவித காலணிகள்

1958-ல் திருச்சபைக்கோர் தலைவரைத் தெரிவுசெய்வதற்காகக் கர்தினால்மாரின் இரகசியக்கூட்டம் சிஸ்ரைன் சிற்றாலயத்தில் கூடியது. அதற்குமுன்னால் கார்போனியும், அவரது உதவியாளரும் வழமைப்பிரகாரம் புதியபாப்பு தெரியப்பட்டவுடன் அணிவதற்கான பாதரட்சைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டனர். இரகசியக்கூட்டத்தில் பங்குபெறும் கர்தினால்களின் பாதங்களில் பெரியது, சிறியது, நடுத்தரமானது என மூன்றுவகையைத்தெரிந்து காலணிகள் தயாரிக்கப்பட்டன. இவற்றில் அருளப்பதந்தை சிறியவகையையே உடனடித் தேவைகட்காக உபயோகித்தார்.

### அலுவலக ஆடையுடன்

அடுத்ததினத்தில் புதியபாப்பரசரின் பணியாளர்கள் திரு. கார்போனியைப் பாப்பரசரின் அந்தரங்கஅறைக்கு வருமாறு தொலைபேசிமூலம் தெரிவித்தனர். திருச்சபையின் தலைவரைத் தரிசிப்பதற்குரிய உடைகளில்லாமைபற்றித் தெரிவித்தார் அவர். இருப்பினும், அலுவலக ஆடைகளுடன் வரலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே, தமது அளவுகருவிகளுடன் பாப்புவின் அந்தரங்க அறைக்குச்சென்றார் கார்போனி.

'எமது பணியாளர்கள் எமக்குமுன் தோன்றுவதற்கு விசேடஆடைகள் அணிந்திருக்க வேண்டியதில்லை'எனப் புன்னகையுடன் தெரிவித்தார் புதிய பாப்பு. பின்னர் பாப்புவின் பாதஅளவுகளைக் கணித்த கார்போனி தமது பதிவுப்புத்தகத்தில் ஒரு விசேஷபகுதியில் அவற்றைக்குறித்துப் பலவருடகாலமாகப் பாப்புமாருக்காகஆற்றிவந்த சேவையைப் புதுப்பித்துக்கொண்டார்.

### இராணுவ பாதரட்சைகளில் நாட்டம்

'நாம் இதுவரை ஏராளமான பாதரட்சைகளை அணிந்திருக்கிறோம். ஆயினும், எமக்கு மிகவும் பிடித்தமானவை முதல் மகாயுத்தத்தில் நாம் கடமையாற்றும்போது இராணுவத்தினரால் அளிக்கப்பட்ட சப்பாத்துகளே. அவை அணிவதற்கு இலகுவாகவும், பாதங்கட்குச் சொகுசாகவும் இருந்தன. அம்மாதிரியில் எமக்கான காலணிகளைத் தயாரியுங்கள்' எனத் திருச்சபையின் புதியதலைவர் கேட்டுக்கொண்டார்.

பாப்புமாருக்கான பாதரட்சைகளைத் தயாரிப்பதில் வெகுகாலம் ஈடுபட்டிருக்கும் கார்போனி இராணுவவீரர்களின் காலணிகளின் அமைப்பில் பாப்பரசருக்கும் பாதரட்சைகளைத் தயாரித்தார். அவரின் பாராட்டுதல்களையும் பெற்றார்.

இவரது தொழிற்சாலையில் பலஉதவியாளர்கள் உண்டு. எனினும், பாப்பரசரின் தேவைகளைத் தாமே நேரடியாகக் கவனிக்கிறார். இவரது குறிப்புப்புத்தகத்தில் காலஞ்சென்றபாப்புமாரினதும், அநேக கர்தினால்கள், மேற்றிராணிமாரினதும் பாராட்டுரைகள் உண்டு.

## நிழற்படம் பிடிப்போர்

### பாப்புவின் படப்பிடிப்பாளர்

மூன்று தலைமுறையாகப் பாப்புவின் படப்பிடிப்பாளர்என்ற கௌரவத்தைப் பெற்றது பெலிசி குடும்பமாகும். இக் குடும்பத்தின்வழிவந்த லூயிஜிபெலிசி இன்று பாப்புவின் படப்பிடிப்பாளராக விளங்குகிறார். வத்திக்கான் என்ற உலகின் மிகச்சிறிய இராச்சியஎல்லைக்குள் இருந்தபடியே இந்தமனிதர்தயாரித்த நிழற்படங்களின்தொகை கணக்கிலடங்காதவை. ஒவ்வொருவாரமும் நடைபெறும் பாப்பரசரின் முக்கியநிகழ்ச்சிகளை, உலகப்பிரமுகர்களின் தரிசனைகளை இவரது படப்பிடிப்புக்கருவி சிறந்த ஓவியங்களாக மாற்றிவிடுகிறது. ஏழைகளின் குடிசைமுதல் அரசர்களின் மாளிகைவரை லூயிஜி பெலிசி தயாரித்த பாப்புவின் நிழற்படங்களே காட்சிதருகின்றன. பத்திரிகைகளும், செய்திப்படங்கள் தயாரிப்போரும் இவரின் செய்திப்படங்களுக்காகக் காத்திருப்பர்.

1860-ல் அதிரியாற்றிக் கிராமத்திலிருந்து இசைக்கலையில் பயிற்சிபெறுவதற்காக ரோமைநகருக்கு வந்தார் யோசவ் பெலிசி. இசைக்கலை பயில வந்தவரைப் படிப்பிடிப்புக்கலை கவர்ந்தது. தமது இசைக்கருவிகளைத் தூர எறிந்துவிட்டு நிழற்படங்களை உருவாக்குவதில் சிரத்தையெடுத்தார். அவரது மூத்தபுதல்வர் அல்பேட் பெலிசியுடன் புகைப்பட நிலையமொன்றை ஆரம்பித்தார். கர்தினால்மாரும், மேற்றிராணிமாரும் அவரைத்தேடி வந்தனர். பெலிசியின்புகழ் பாப்புவுக்கும் எட்டியது. தமது அறுபதாவதுவயதில் யோசவ் பெலிசி பாப்புவின் படப்பிடிப்பாளர் என்ற கௌரவத்தையும், உரிமையையும் பெற்றார். அவர் இறந்தபின்னர் மூத்தபுதல்வர் அல்பேட் பெலிசி இந்த ஸ்தானத்தை வகித்தார். இவரது மூத்தபுதல்வர் லூயிஜி பெலிசி பதினேழாவது வயதிலேயே தந்தையிடமும், போனிடமும் பயிற்சிபெறத் தொடங்கிவிட்டார். அல்பேட்பெலிசி 1950-ல் காலமாக லூயிஜி பெலிசியைத் தமது உத்தியோகபூர்வமான படப்பிடிப்பாளராகக் காலஞ்சென்ற பன்னிரண்டாம் பத்திநாத தந்தையவர்கள் நியமித்தனர்.

### பழைய நண்பர்கள்

பாப்பரசர் முன்னர் ஒரு குருவாக இருந்தசமயத்தில் அவரது பூசைப்பரிசாரகராக விளங்கியவர் லூயிஜி. அன்றிலிருந்தே இருவர்க்குமிடையில் நட்புத் தோன்றியது. இன்றெல்லாம் லூயிஜி பாப்பரசரைப் படம்பிடிப்பதற்காகத் தமது கருவிகளை ஆயத்தம்செய்யும் சமயங்களில் அருளப்பதந்தை அவர்பக்கலில்சென்று தோளில்தட்டி எங்களிருவருக்குமிடையில் நட்புத்தோன்றியது எப்போதுஎன வினவுவார். லூயிஜியும் புன்முறுவலுடன் எனக்கு அறிவு தோன்றிய காலமுதல், தந்தையே எனப் பதிலளிப்பார். பரிசுத்த வைபவங்களின்போது அவற்றைப் படம்பிடிப்பதற்காக மாடங்களின்மீது ஏறியும், தூண்களில் அமர்ந்தும், ஏணிகளில் தொங்கியும் தமது கருவியுடன் லூயிஜி சிரமப்படும்போது பாப்பரசர் அவரைத் திரும்பிப்பார்த்துப் புன்னகைசெய்யத் தவறுவதில்லை. "பரிசுத்த தந்தையின் புன்னகை எனது வேதனைகளை மாற்றிவிடும். மீண்டும் உற்சாகத்துடன் படங்களைப்பிடித்துத் தள்ளுவேன்" என்கிறார் லூயிஜி.

### திருச்சபையின் நிகழ்ச்சிகள்

பெலிசியின் குடும்பநிகழ்ச்சிகளடங்கிய புத்தகத்தில் அக்குடும்பத்தினர் பாப்புமாரின் படப்பிடிப்பாளராகக் கடமையாற்றத் தொடங்கிய காலத்திலிருந்து இற்றைவரை திருச்சபையின் சரித்திரம்முழுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. இந்த இருபதாம் நூற்றாண்டின் பாப்புமார் அனைவரது நிகழ்ச்சிகளும், இன்றைய எல்லாக் கர்தினால்களும், மேற்றிராணிமாரும், பாப்புமாரைத்தரிசித்த உலகபிரமுகர்கள் அத்தனைபேரும அதில் அடங்கியுள்ளனர். இத்தாலிய அரசாங்கத்துக்கும், திருச்சபைக்குமிடையே நடைபெற்ற பிரசித்திபெற்ற லத்தறன் உடன்படிக்கை, பாப்புமாரின் முடிபுனைவைபவங்கள், புனிதர் பதவியளிக்கும் நிகழ்ச்சிகள் முதலிய ஏராளநிகழ்ச்சிகளைப் பெலிசி குடும்பத்தினர் படங்களில் தயாரித்திருக்கின்றனர்.

### படப்பிடிப்பின் வளர்ச்சி

யோசவ் பெலிசிகாலத்தில் படப்பிடிப்புக்கலை ஆரம்பநிலையிலிருந்தது. ஒருபடத்தைத் தயாரிக்க ஒருதிங்கள் செல்லும். பலதடவைகளில் மீண்டும் மீண்டும் ஒரேபடத்தை எடுக்கவேண்டியிருக்கும். இக்கலை வளரவளரப் பெலிசிகுடும்பத்தினர் உபயோகித்த சாதனங்களிலும் மாறுதல்கள் காணப்பட்டன. இன்று லூயிஜிபெலிசி நவீன படப்பிடிப்புச் சாதனங்கள் அனைத்தையும் தமது காரியாலயத்தில் நிறுவியுள்ளனர். டெலிவிஷன் எனப்படும் தொலைக்காட்சி யந்திரங்களும், சினிமாப்படப்பிடிப்புக் கருவிகளும் அவரிடம் உண்டு.

## அங்கிகள் உருவாக்குவோர்

இராயப்பர் மகாலயத்திற்குவெளியே மற்றைய படப்பிடிப்பாளர்கள் நிறுத்தப்பட்டுவிடுவார். வத்திக்கான் இராச்சியத்துள்செல்லவும், படம்பிடிக்கவும் பாப்புவின் படப்பிடிப்பாளருக்கே உரிமையுண்டு.

### ஓய்வுநேரங்கள்

ஞாயிற்றுக்கிழமைகளில் முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றாலொழிய லூயிஜிக்கு ஓய்வுதினமாகும். தமது மோட்டார்வண்டியில் குடும்பத்தினரை ஏற்றிக்கொண்டு லூயிஜி கடற்கரைக்குச்சென்று அன்றையதினத்தை உல்லாசமாகக் கழிப்பார். தமது திரைப்படக்கருவியினால் குடும்பநிகழ்ச்சிகளையும், இயற்கைக் காட்சிகளையும் படம்பிடித்து அவற்றைத் திரைப்படமாக்கிக் குடும்பத்தினர் முன்னிலையில் திரையிட்டு மகிழ்வார். பாப்பரசர் ஞானவொடுக்கம்செய்யும் தினங்களும் இவருக்கு ஓய்வுதினங்களாகும். மற்றைய நாட்களில் உரோமைநகரிலுள்ள தமது படப்பிடிப்பு நிலையத்திலோ அல்லது வத்திக்கானிலுள்ள காரியாலயத்திலோ கடமையாற்றியவண்ணம் காணப்படுவார்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## திருச்சபைப் பொதுச்சங்கத்தின் சித்திக்காக இஸபிரீத்துசாந்து சருவேசுரனுக்குச் செபம்

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவே! உமது பிரசன்னத்தினாலும், உறுதியான வழிநடத்துதலினாலும் திருச்சபையோடு என்றுமிருக்கும்படி யேசுவின் நாமத்தினால் பரம பிதாவினால் அனுப்பப்பட்டவரே! திருச்சபையின் பொதுச்சங்கத்தின்மேல் உமது நிறைவான வரங்களைப் பொழிந்தருளும்படி தேவரீரை இரந்துமன்றாடுகிறோம்.

எமது மதுரமான ஆறுதலும், ஆசிரியருமானவரே! பரிசுத்த பாப்பரசரின் அழைப்புக்கிணங்கி உரோமாபுரியில் திருச்சங்கங்கூட மகிழ்ச்சியுடன் வந்துசேரும் ஆயர்களின் மனதுகளை உமது தெய்வீக பிரகாசத்தால் நிரப்பியருளும்.

இத்திருச்சங்கத்தின் விளைவாகச் சுவிசேஷத்தின் ஒளியும், பலமும் உலக மக்களிடையே அதிகமதிகமாய்ப் பரவவும், கத்தோலிக்க வேதமும் அதைப்பரப்பும் பணியும் இனிதே வளம்பெறவும், திருச்சபையின் போதனையும், நல்லொழுக்க வழிகாட்டுதலும் எல்லோராலும் பூரணமாய் ஒப்புக்கொள்ளப்படவும் வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்.

எமது ஆத்துமத்தின் மதுரமான வழிகாட்டியே! நாங்கள் மனத்தாழ்ச்சியும், அமைச்சலும் உள்ளவர்களாயிருக்கவும் திருச்சங்கத்தின் முடிவுகளை நன்றிநிறைந்த மனதுடன் ஏற்று, அனுசரிக்க ஆசைப்படவும் எங்கள் மனதைச் சத்தியத்தில் உறுதிப்படுத்தியருளும்.

கிறிஸ்துநாதருடைய் பெயரில் பெருமைபாராட்டிக்கொண்டு அவரால் நிறுவப்பட்ட ஏக மந்தையைவிட்டு இன்னும் பிரிந்து நிற்பவர்கள் கடைசியாய் ஒரே மேய்ப்பனின்கீழ் ஒற்றுமையைக் கண்டடையச் செய்தருளும்படியும் மன்றாடுகிறோம்.

முன்னொருநாள் பெந்தெக்கோஸ்து தினத்தில் தேவரீர் புரிந்த அற்புதங்களை எங்கள் காலத்திலும் இன்னொருமுறை செய்தருளும்படி கெஞ்சிமன்றாடுகிறோம். உமது திருச்சபை யேசுநாதருடைய தாயாரான பரிசுத்த கன்னிமரியம்மாளுடன் தளராத வேண்டுதலில் ஒன்றித்திருப்பதாலும், அர்ச். இராயப்பரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதாலும், எமது திவ்விய இரட்சகரின் இராச்சியம்—உண்மையினும், நீதியினும், அன்பினும், சமாதானத்தினும் இராச்சியம்—உலகமெங்கும் பரவச்செய்தருளும் சுவாமி, ஆமென்யேசு.

குறிப்பு: இச்செபத்தைப் பத்தியுடன் செபிப்போர் அடையக்கூடிய பலன்களாவன:

1. பத்துவருட அபூரணபலன் (ஒவ்வொரு முறையும்)
2. நாள்தோறும் ஒருமாதமளவாகச் செபித்தால் (வழமையான நிபந்தனைகளுக்கிணங்க) ஒரு பரிபூரணபலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## இளைஞரே !

# கிறிஸ்துநாதர் உங்களிடம் எதிர்பார்ப்பதை எண்ணிப்பாருங்கள்

பரிசுத்த தந்தை சென்ற மாதத்தில் ஒருநாள் பல நாடுகளிலுமிருந்துவந்த பெருந்தொகையான இளைஞருக்குப் பேட்டியளித்தார். அவர்களுக்கு இளைஞர்மட்டில் கிறிஸ்துநாதர் எவ்வளவு அன்புகாட்டுகிறார் என்பதுபற்றி உரை நிகழ்த்தினார். அதன் விபரம் கீழே தரப்படுகிறது.

இளைஞர் கூட்டம் பாப்பரசர் அவர்களுக்குப் பேட்டியளிப்பதற்குக் காட்சியளித்தபோது வானளாவ அவரை வாழ்த்தி வரவேற்றனர். உரத்த சத்தமாய்க் கோஷமிட்டனர். பாப்பரசர் சத்தத்தை நிறுத்தும்படி கூறியபொழுதும் அவர்கள் அதைச் சட்டை செய்யவில்லை. உடனே பாப்பரசர்: "நீங்கள் அமைதியாக இருக்காவிட்டால், நான் உங்களுக்கு ஆசீர்வாதமருளி, பேட்டியை முடித்துவிடுவேன்" என்று கண்டிக்கும் மனோபாவத்துடன் எச்சரித்தார். இளைஞர் அமைதியடைந்தனர்.



பரிசுத்த தந்தை, இளைஞர்மட்டில் கிறிஸ்துநாதரின் அன்பையும், அவர்களுக்குக் கிறிஸ்துநாதரின் அழைப்பைப் பற்றியும் உரைநிகழ்த்தினார். "உலக வாழ்க்கையில் மகா உந்நதமான இளமைப்பருவத்தைக் கிறிஸ்துநாதர் அதிக கவனத்தோடும், கருணை உள்ளத்தோடும் தயையுடனும் பாதுகாத்துவருகிறார் என்று குறிப்பிட்டார். மேலும் அவர்: "யௌவனத்தின் தன்மை—சுவிசேஷத்தில் அடிக்கடி இடம்பெற்று ஒவ்வொரு முறையும், வெவ்வேறு விதமாக—பலவித வாசனைத் திரவியங்களால் வரும் நறுமணம்போல் மெருகூட்டி நிற்கின்றன என்றார்.

கிறிஸ்துநாதர் புதுமையாக உயிர் கொடுத்து இரட்சித்த மூவரில் இருவர் இளைஞரே என்பதைச் சுட்டிக் காட்டினார் பாப்பரசர். பசியால் வாடிக் களைத்திருந்தவர்களுக்கு உணவூட்ட யேசுநாதர் விரும்பியபோது அப்பத்துண்டுகளையும் மீன்களையும் அவருக்குதவியது ஒரு இளைஞனே. அவனைப்போல, இளம் கத்தோலிக்கருக்கும் எமது விசுவாசத்தைப் பரப்புவதற்குச் சந்தர்ப்பமும், வாய்ப்பும் உண்டு.

உங்கள் மட்டில் எமது இரட்சகர் வைத்திருக்கும், நேசம் எத்தன்மையானது என்பதை அறிந்துகொள்ளுங்கள். உங்களிடம் எதிர்பார்க்கப்படுவதையும் எண்ணிப்பாருங்கள்.

இதற்காகவே வாழ்க்கை நான் என்ற அகந்தையால் கட்டுப்படுத்தப்பட்டதாயும், மூடி மறைக்கப்பட்டதாயும், சலனபுத்தியுடையதாயுமிராமல், ஒருவனது மனதைத் திறந்து விரிந்த மனப்பான்மையுடன் மற்றவர்களுக்கு அறிவூட்டவும் நன்மை செய்யவும் உதவ வேண்டியது என்பதை உங்களைப் போன்ற இளைஞருக்கு நீங்கள் உணரச்செய்ய வேண்டும் என்றார் பாப்பரசர்.

இங்குள்ளவர்களில் சிலர், உலகத்தைத் துறந்து கிறிஸ்துவின் அழைப்புக்குச் செவிமடுத்து அவரைப் பின்பற்றித் துறவறசீவியத்தை மேற்கொள்ளுவதனால் மேற்கூறிய சேவையை நிறைவேற்றுவார்கள்.

துறவறத்தில் ஈடுபடாதவர்களும் கூட வெறுமையான உலக காரியங்களையும், உலக நாட்டங்களையும் விட்டுவிட்டு, தம்மை நன்றாகச் சேவிக்கவும், தம்மைப் பரிபூரணமாக அறியவும், தம்மை அளவுகடந்த விதமாய் நேசிக்கவும், தம்மால் நேசிக்கப்படவும் கருத்தாய் இருக்கும்படி கேட்டிருக்கிறார் யேசுநாதர்.

இளைஞரே! முழுமனதோடும் கிறிஸ்துநாதரைப் பின்பற்றுவதற்கு உங்களைப்போல் வைராக்கியமும், மனஉறுதியும் உடையவர்கள் இருக்கமுடியாது. சுவிசேஷத்தில் அழைக்கப்பட்ட இளைஞரைப்போல யேசுநாதர் உங்களையும் சீவியத்துக்கும், தேவவரப்பிரசாதத்துடன் இஷ்டப்பிரசாதத்துடன் வாழவும், நீதிமான்களின் இருதயங்களை இருப்பிடமாய், ஆலயமாய்க் கொள்ளும் பரிசுத்த தமதிரித்துவத்தின் ஆலயங்களாக வாழவும், உங்களை அழைக்கிறார். திவ்விய பூசையிலும், நற்கருணையிலும் அதிக பக்தியுடன் கலந்து, அதில் நிலைத்திருக்கும்படியும், சருவேசுரனுடைய கற்பனைகளுக்குப் பிரமாணிக்கமுடையவர்களாய் வாழும்படியும் விரும்புகிறார் என்று கூறி முடித்தார்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரி. சதாசகாயமாதாவுடைய கிருபையினாலும், கோடிஅற்புதர், அர்ச் குழந்தை யேசுவின் தெரேசம்மாள் இவர்களுடைய மன்றாட்டினாலும் நான் கேட்ட அநேக காரியங்கள் அனுகூலமடைந்தன. கடைசியாக என்வீட்டுவிஷயத்தைப்பற்றிக் கண்கலங்கி நிற்கும்போதும் சதாசகாயத் தாயே நீரே, தஞ்சமென்று ஓடியபோது யாவும் ஆச்சரியப்படத்தக்கநிலையில் அனுகூலமாயின. எனது நன்றியைத் தெரிவித்து, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

மாத்தளை. உமது அடியான்.

* * *

சருவேசுரன் ஸ்துதிக்கப்படுவாராக!

யேசுவின் திருஇருதயம், அர்ச் வியாகுலமாதா, பரி. திருக்குடும்பம், சகல மோட்சவாசிகள், உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்கள் இவர்களின் விசேஷ உதவியால் நான் கேட்ட மன்றாட்டுக் கிடைத்தது. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். இன்னும் நான்கேட்ட மன்றாட்டுகள் கிடைக்க ஆண்டவர் கிருபைசெய்வாராக. காலதாமதத்திற்காக மன்னிப்புக்கோருகிறேன்.

---

## சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

### 26. ஜெபஆலயத்திலிருந்த அசுத்த அரூபி

#### I. கப்பர்னூவும் ஊரில் வாசம்

(மத். IV. 13–17; மாற். I. 21–22; லூ. IV. 31–32)

(1) **கப்பர்னூவில் வாசம்** (மத். 13, மாற். 21, லூ. 31) — கப்பர்னூவும் திபேரியஸ் வாவிக்கு மேற்குக்கரையில் இருந்த கலிலேயாவின் தலைப்பட்டணம். அது இருந்த இடத்திற்றான் இப்போது 'ரெல்குவும்' என்ற பட்டணம் இருக்கிறதென்று பலர் எண்ணுகிறார்கள். யேசு முதலாம் பாஸ்குத்திருநாளுக்குப் போகுமுன் நசரேத்தைவிட்டுத் தமது தாயார், 'சகோதரர்', சீஷர்களோடு கப்பர்னூவுக்கு வந்து அங்கே சிலநாட்கள் தங்கினார் என்று அறிந்தோம் (அரு. ii. 12). இப்போது அப்பட்டணத்தைத் தமது கலிலேயாப் போதனைக்கு மையமாகத் தெரிகிறார்.

(2) **அதிகாரமுடையவராய்** (மாற். 22, லூ. 32) — வேதபாரகர் முன்னோருடைய அதிகாரத்தை மேற்கோள் செய்துதான் பிரசங்கித்தார்கள். ஆனால், யேசுநாதர் தம்முடைய சொந்த அதிகாரத்தோடு பிரசங்கித்தார்

(மத். v. 21–22)

(3) **நிறைவேறும்படியாயிற்று** (மத். 14, இசையாஸ் ix. 1–2)— கலிலேயா நாடுகளுக்கு அசீரியரால்வந்த நாசத்தைத்தான் (4 அர. xv. 29) அந்தகாரம் என்கிறார். அந்த நாடுகளுக்கு மெசியாவின் போதனையால் வரவிருக்கும் பாக்கியத்தைத்தான் வெளிச்சம் என்கிறார். இந்தத் தீர்க்கதரிசனம் யேசுநாதர் கலிலேயாவில் நடத்தின போதனையால் நிறைவேறிற்று. சிலர் இது இரண்டாவதான நிறைவேறுதல் என்றும், எசெக்கியாஸ் அரசன் காலத்தில் இஸ்ராயேலருக்குச் செனாச்செறிப் என்னும் அசீரிய அரசன்மேல் புதுமையாக வந்த வெற்றிதான் (4 அர. xix. 35) முதலாவதான நிறைவேறுதல் என்றும் சொல்லுகிறார்கள்.

(4) **சபுலோன், நெப்தலி** (மத். 15) — அதாவது, கலிலேயா வாவிக்கு மேற்கே இருக்கும் கீழ்க்கலிலேயாவும், வடக்கே இருக்கும் மேற்கலிலேயாவும். சபுலோன், நெப்தலி கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள்தான் யேசுநாதரின் முதற் சீஷர்களாய் வந்தார்கள். அப்போஸ்தலர்மாரிலும் பெரும்பகுதி இந்தநாடுகளில் உள்ளவர்கள்தான்.

"யோர்தான் நதிக்குப் புறம்" என்றால் யோர்தான்நதிக்குக் கிழக்காலே இருக்கும் நாடு.

"கடலுக்குச் செல்லும் வழி" என்றால் டமஸ்கசிலிருந்து சபுலோன், நெப்தலி ஊடாகக் கடலுக்கு ஆக்கர் அருகால் செல்லும் பாதை. ஆனால், மத்தேயு கலிலேயா வாவிக்கு மேற்காலே பெத்சாயிதா, கொர்சாயிம், கப்பர்னூவும், ஜெனசரேத் பட்டணங்களுக்கருகால் செல்லும் பாதையைக் கருதியிருக்கலாம். ஜெனசரேத் பட்டணத்தின் மற்றப்பெயர் திபேறியஸ்.

"புறசாதியாருடைய கலிலேயா" என்றால் 'தீர்' பட்டணத்தை எல்லையாய்க் கொண்டிருக்கிற யூதரில்லாத மேற்குக் கலிலேயா.

#### II. அசுத்த அரூபி

(மாற். I. 23–28; லூ. IV. 33–37)

(5) **அசுத்த அரூபி** (மாற். 23, லூ. 33) — அதாவது, கற்புக்கெதிரான பாவங்களைச் செய்யத் தூண்டிவிடுகிற பேய்.

(6) **எங்களைக் கெடுக்க** (மாற். 24, லூ. 34) — அதாவது, மனிதருக்குத் தீங்கு வருவிக்க நாங்கள்செய்யும் வேலைகளை, எங்களை நரகத்தில் கட்டிவைப்பதினால் தடுக்க (1 அரு. iii. 8). நரகத்தில் கட்டிவைப்பதினால் அவர்களுடைய வேதனையும் கூடும்.

(7) **அறிவேன்** (மாற். 24, லூ. 34) — பேய்கள் யேசுநாதரை நோக்கி "நீர் சருவேசுரனுடைய குமாரன்" என்று சொன்னாலும், அவர் உண்மையான சருவேசுரன் என்பதை அவருடைய உத்தானத்தின் பின்புதான் நிச்சயத்துடன் அறிந்தார்கள். ஆனால், அவர் மெசியா என்பதைத் தொடக்கத்திற்றானே அறிந்திருக்கலாம் (லூ. iv. 42). "பரிசுத்தர்" என்பது மெசியாவின் நாமங்களில் ஒன்று (இசை. x. 20). என்றாலும், மெசியா எப்படி உலகத்தை இரட்சிப்பார் என்பதைப் பேய்கள் இன்னும் அறியவில்லை.

---


# கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. 3327

## யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

கட்டுவன்

இலகுப்பிள்ளை இராசதுரை

— வழக்காளி.

எதிராக, எளாலை

1. உலகர் வீரபத்திரரும்
2. பெண் பறுவதமும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 3327-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1961-ம் ஆண்டு மார்கழிமாதம் 20-ந்தேதி (20-12-61) புதன்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,130. இன்னும் ரூபா 1,500-க்கு 21-4-60 தொடக்கம், 18-10-60 வரைக்கும் 10% வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு [illegible] 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 183 சதம் 30. இதில் செலவால் ரூபா 100 கொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு, மல்லாகம் கோவிற்பற்று, எளாலை இலற "செட்டி ஒல்லை" ப. ந. இ. 2 குளி $5\frac{1}{4}$ உம். செய்பயிர்களும், கல்வீடும், கிணறும். எல்லை: கிழக்கு—வழிவாய்க்காலும், கந்தர் கைம்பெண் பொன்னுவின் ஆதனமும். வடக்கும், மேற்கும்—றோட்டு. தெற்கு—ஆறுமுகம் செல்லத்துரைக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு எல்லைக் காணியில், கிழக்கு எல்லையிலிருக்கும் கிணற்றில் 3முள அகல வழிவாய்க்கால் பங்கும். இது அடங்கலும்.

த. செல்லையா,

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

37, கொழும்புத்துறை வீதி,

சுண்டிக்குளி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த தந்தையின் பணியாளர்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறந்த தயாரிப்புகள்

இதுவரை தாம்தயாரித்த ஓவியங்களுள் மிகச்சிறந்தவையென இரண்டு புகைப்படங்களை வாயிஜி குறிப்பிடுகிருர். காலஞ்சென்ற பன்னிரண்டாம் பத்திநாதர் அருள்நிறைந்த நிலையில் கரங்குவித்து, முழந்தாளிட்டு வேண்டுதல்செய்வதும், தந்தை அருளப்பர் தமது படிப்பறையில் பெரியபுத்தகமொன்றைப் படித்தவண்ணம் காணப்படுவதுமாகிய இருஓவியங்களே அவர் தமது சிறந்த தயாரிப்புகளெனக் கருதுபவை. தமது படப்பிடிப்பாளருக்கு அண்மையில் பாப்பரசர் "செவாலியர்" என்ற கௌரவவிருதை அளித்துள்ளாரென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## பாப்புவின் தையற்காரர்

பாப்புவின் தையற்காரர்என்ற பெருமையும், கௌரவமும் பொனுவந்துரா கமாரெல்லி எனபவரைச் சார்ந்தது. கத்தோலிக்க திருச்சபையின் துறவிகட்கான அங்கிகளைத் தயாரிப்பதில் பிரசித்திபெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் இவர்.

## மூவித அங்கிகள்

பன்னிரண்டாம்பத்திநாதர் காலமானதும் வழமைபோலத் தையற்காரர் கமாரெல்லி புதியபாப்புவாகத் தெரிந்தெடுக்கப் படுபவருக்காக மூன்று அங்கிகளைத் தயாரித்தார். இவ்வேலை இலகுவானதல்லஎன அவரேகூறுகிருர். முதலில் பாப்புவாக வரக்கூடியவர் யார் எனத் தையற்காரர் தீர்மானிக்கவேண்டும். கர்தினல்மாரில் பெரியவர்சிறியவர், இடைத்தரமானவர்என மூவரைத் தெரிதல்வேண்டும். அவர்களின் அளவில் அங்கிகளைத் தயாரிக்கவேண்டும். பதினைந்தாம் ஆசிர்வாதப்பருக்கு மிகச்சிறிய அங்கியும் பெரிதாகவிருந்தது. பதினோராம் பத்திநாதருக்கு மிகப் பெரியஅங்கியே போதாமலிருந்ததாம். ஆயின் அருளப்பதந்தைக்காக அவர் தயாரித்தஉடைகள் ஓரளவுபொருத்தமாக இருந்தன. இதற்கோர் காரணமும் இருக்கலாம். அருளப்பதந்தை இத்தையற்காரரின் நீண்டகால வாடிக்கையாளராவர். எனவே அவரதுஅளவுகள் தையற்காரருக்கு நன்குதெரிந்திருந்தன.

## நீண்டகால சேவை

1780-ல் ஜியோவன்னி பற்றிஸ்ரா என்னும் கமாரெல்லியின் கொப்பாட்டனுர் துறவிகட்கான அங்கிகளைத் தயாரித்தளிக்கும் தொழிற்சாலையொன்றை உரோமைநகரில் நிறுவினுர். 1813-ல் ஏழாவது பத்திநாதபாப்பரசர் அவரைத்தமது தையற்காரராக நியமித்தார். அன்றிருந்து இன்றுவரை இரண்டு நூற்றுண்டுகட்குமேலாக இக்குடும்பம் பாப்புமாரின் தையற்காரராக விளங்கிவருகிறது.

கமாரெல்லியின் நிறுவனத்தில் தோலால்கட்டப்பட்ட பெரியதோர் பதிவுப் புத்தகமொன்றுண்டு. பரிசுத்த தந்தை அருளப்பரின் உருவப்படமும், அவரது சொந்தக்கையெழுத்தும் புத்தகத்தின் ஆரம்பத்தை அணிசெய்கின்றன. **ஒவ்வொருகுருவும் தமக்குத் தகுதியான ஆடைகளையே அணிதல் வேண்டும்** என்ற தந்தையின் மணிமொழிகள் அவரது சொந்தக் கையெழுத்துடன் அங்கு காணப்படுகிறது. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டினுல் காலஞ்சென்றபாப்புமார், மேற்றிராணிமார், கர்தினுல்மார்என்போரின் பாராட்டுரைகளைக் காணலாம்.

## தொடர்ந்துவரும் சேவை

தமது சிறியதொழிலகத்தில் அமர்ந்தபடியே அமைதியாகக் கருமமாற்றும் கமாரெல்லி திருச்சபையின் தலைவர்கட்கு அளித்துவரும்சேவை குறிப்பிடத்தக்கது. இவரது நிறுவனத்தில் ஆரம்பத்தில் குருத்துவஅங்கியைப் பெறவந்தோர் இன்று மேற்றிராணிமார், கர்தினல்மாராகவும் விளங்குகின்றனர்.

பரிசுத்ததந்தை அருளப்பர் கமாரெல்லியின் நீண்டகால வாடிக்கையாளராவர். பலவருடங்கட்கு முன்னுல் குருத்துவ அங்கியொன்றைப் பெறுவதற்காகக் குாவர் ரொங்கல்லி இத்தையற்காரரிடம் சென்றுர். கமாரெல்லியின் பண்பானசேவை குாவரைக்கவர்ந்தது. தொடர்ந்து அவரிடமே தமக்காய அங்கிகளைப் பெற்றுக்கொண்டார். மேற்றிராணியாரானபோதும், கர்தினலானபோதும், ஏன் பாப்புவாக மாறிய பின்றும் அருளப்பதந்தை தமதுவாடிக்கையாளனைக் கைவிடவில்லை.

## மிகப்பெரிய வாடிக்கையாளர்

கத்தோலிக்க திருச்சபையின் எல்லாக் கர்தினல்மாரும், ஏராளமான மேற்றிராணிமாரும் கமாரெல்லியையே தங்கள் அங்கிகட்காக எதிர்பார்க்கின்றனர். ஒருகர்தினலின் ஆடைகள் பூராவையும் தயாரிக்க ஆயிரக்கணக்கானரூபாக்கள் தேவை. சாதாரண அங்கிகளோ நூறுரூபாவுக்குள்முடிந்துவிடும்.

கமாரெல்லியின் தொழிலகத்தில் அளவெடுத்து வெட்டுபவர் ஒருவரும், தையற்காரர்கள் ஐவரும்உளர். இவரது இரு புதல்வர்களும், ஓவியத்திலதேர்ச்சிபெற்ற மூத்தசகோதரியும் இத்தொழிலில் உதவியாளராக உள்ளனர். வட இத்தாலியிலும், பிரான்சிலுமிருந்து தமக்குத்தேவையான விலையுயர்ந்த உபகரணங்களைக் கமாரெல்லி பெற்றுக்கொள்கிருர். கன்னியர்மடங்கள் றேந்தை பின்னுதல்போன்ற கருமங்களில் உதவியளிக்கின்றன.

இரும்புத்திரை வீழ்ந்ததின்காரணமாகத் தமதுதொழிலில் சிறிது நஷ்டமேற்பட்டதாக இவர் குறிப்பிடுகிருர். போலாந்து, ஹங்கேரிமுதலிய தேசங்களிலும் இவரின் வாடிக்கையாட்கள் ஏராளமாக இருந்தனராம்.

சா. பெ.

---

# நொருங்கின எலும்புகள் குணம்பெற்றன

பிராஞ்சிய—ஜேர்மானிய எல்லைப் புறத்தாளாகிய இளமங்கை ஒருத்தி சில நாட்களின் முன்பு என்னைக் காண வந்திருந்தாள். ஐந்து வயதுப் பாலன் ஒருவன் 'மோட்டோசைக்கிளில்' அகப்பட்டுக் குற்றுயிராக எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகக் கூறி, தேவைப்பட்ட பலருக்கு நான் புதுமை வரவணிக்கம் அளித்துதவி இருப்பதால் தனக்கும் ஒன்று தர இயலுமா என விசாரித்தாள்.



விபத்துக்குள்ளாகி அறிவு நினைவு அற்றிருந்த பாலனை 'டாக்டர்' மார் ஐவர் சோதித்துப்பார்த்து முடியாதெனக் கைவிரித்து விட்டனர். பிள்ளையின் அங்கம் அடங்கலும் அநேக காயங்கள்: மண்டையில், பிடரி ஓடும் கன்ன ஓடும் நொருங்கிப்போயின; தோள் மூட்டில் முன்பக்க எலும்பு ஒன்று உடைந்துபோனது; வலது முழங்கால் சில்லுடைந்து, கீழ்க்கால் மூளி எலும்பு $2\frac{1}{2}$ அங்குலம் மேற்காலுள் செருகிக்கொண்டது.

பாலனின் கட்டிலில் நான் கொடுத்த புதுமை வரவணிக்கம் தொங்கவிடப்பட்டு அதிக நேரமாகவில்லை—மருத்துவ சாஸ்திரத்தால் முடியாதென 'டாக்டர்'மார் கைவிட்ட பாலன் குணமடைந்தான். இன்னும் பூரண குணத்துடன் பாலன் உயிர்வாழ்கிருன். அஞ்ஞானியாய் இருந்தவரான பாலனின் பிதா இப்போது கத்தோலிக்கராகியிருக்கிருர்.

ஒப்பம்:

**சிஸ்றர், வி. எம். மொசேல்,**

பிரான்ஸ்,

5 பங்குனி 1951.

* * *

எமது இராக்கினி, அர்ச் கத்தரீன் லபுறேக்கு அருளிய வார்த்தைகள்: "இந்த ரூபத்தின்படி வரவணிக்கம் அடித்துக் கொள். வரவணிக்கத்தை ஆசீர்வதித்து அணிந்துகொள்வோர், விசேஷமாய்க் கழுத்தில் அணிந்து கொள்ளுவோர் அதிக வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள். நம்பிக்கை உள்ளவர்களை ஏராளமான பெறுபேறுகள் வந்து நிரவும்."

**புதுமைவரவணிக்க வியாபிப்பு நிலையம்,**

பாத்திமா கோவில்,

கொழும்பு, 10.

---

# தொழிலாளர் பக்கம்

## சம்பளம், வேலையுயர்வு, யந்திரசாதனங்கள்பற்றிப் பரிசுத்த பிதா

கனடாவுக்குச் சேர்ந்த நோவாஸ்கோத்தியாவில் நடந்தேறிய "சமூகவார" ஆராய்ச்சிக் கூட்டத்திற்கு அருளப்பபாப்புவின் பேரால் ராசகருமாதிகாரி கருதினல் சிக்கொஞ்ஞானி அனுப்பிய செய்தியொன்றில் தொழிலாளர் சம்பளம், உத்தியோக உயர்வு, யந்திரசாதனங்கள் பற்றிக்கூறியிருக்கிருர். அண்மையில் பாப்புவிடுத்த "அன்னையும் ஆசிரியையும்" என்ற நிருபத்திலுள்ள விடயங்கள் சிலவற்றிற்கு இக்கடிதம் விளக்கங்கொடுப்பதாகக் கருதப்படுகிறது.

Sவிற்பனை — தேவை விதியைப் பொறுத்தோ இஷ்டபூர்வமாகவோ அல்ல, நீதியின்படியே சம்பளம் நிர்ணயிக்கவேண்டும். சம்பளஏற்றமும்,



உத்தியோக உயர்வும் எல்லாருக்கும் சமமானதும், நீதியால் ஏவப்படுவதுமான உண்மையான தரத்தின்படி கொடுக்க வேண்டும். கூடியளவு ஒவ்வொரு தொழிலாளியும் அவனவன் ஆற்றலுக்கும், ஆர்வத்துக்கும், தகமைக்குமேற்ற தொழில் பெற வேண்டும். யந்திரசாதனங்களை உபயோகிப்பதினுல் தொழிலாளரோ குறித்த ஒரு ரகதொழில் செய்பவரோ பாதிக்கப்படவொண்ணுது இத்தூர் விளைவுகளைச் சமமாக மாத்திரமல்ல, அதிகமாக முதலீடு செய்பவர்களும் பொதுசனரும் பகிர்ந்து கொள்ள வேண்டியது; ஏனெனில், யந்திரசாதனை உபயோகத்தால் யாவரும் நலனடைகிருர்கள். இது சம்பந்தமாகத் தொழிலாளர்சங்கங்கள் யந்திரஉபயோகம்பற்றி அபிப்பிராயங் கூறுவதற்குச் சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

ஒற்றுமையினதும் நிர்வாகத் திறமையினதும் கொள்கை ஒப்புக்கொள்ளப்படுமிடத்து, தாபன இயக்கத்தில் தாமும் அபிப்பிராயங்கூறத் தொழிலாளர் விரும்புவது நியாயமானது.

### மனித மதிப்பு

"சந்தர்ப்பதேவைக்கேற்கவும் வழிவகைக்கேற்கவும் அவ்விருப்பம் நிறைவேற்றப்படலாம். தொழிலில் கவனிக்க வேண்டியது உற்பத்தி மாத்திரமன்று; ஒழுக்கமும் மானிடமதிப்பும் கவனம் பெற வேண்டும்," என அக்கடிதம் கூறுகிறது. மேலும் அது குறிப்பிடுவதாவது: "தொழிலாளரின் உடல் நலத்தையும் ஒழுக்க நிறைவையும் விருத்தியாக்கக்கூடிய நிலைமை அமைக்கப்படவேண்டும். அதாவது, சுகாதார விதிகளை அனுட்டித்து, விபத்துகள் தொழிலைச்சார்ந்த ரோகங்களைத்தடுத்து, வேலைநேரம் நியாயமான கட்டுப்பாட்டுக்குள் அமையவும் வேண்டும்."

### கவனமெடுத்தல்

பெண்கள், சிறப்பாக விவாகமானவர்களும் தாய்மாரும் சாக்கிரதையுடன் நடத்தப்படவேண்டும். இளைஞர் போதிய சரீரவளர்ச்சியும், வலிமையும்பெற்ற பிறகே வேலையில் அமர்த்தப்படவேண்டும். அவர்களது இயற்கை வளர்ச்சியைத் தடைசெய்யாத வேலையேசெய்விக்கலாம். ஒழுக்கத்துக்கும், ஆன்மவளர்ச்சிக்கும் ஆபத்தான எதையும் விலக்கவேண்டும்.

விபத்துக்கள், சுகவீனம், வயோதிபம், வேலையின்மை, விவாகம், பிள்ளைப்பேறு ஆதியாம் காரணங்களையிட்டு நட்டோத்தரவாதக்கட்டளைகளால் தொழிலாளரின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தாவிடில் தொழிற்சாலைகளில் திருப்தியுள்ள சூழ்நிலையை அமைக்கமுடியாது.

"சுயம்புரியாளர்" தொழிலதிபர்கட்கும், தொழிலாளிகட்குமிடையில் நல்லெண்ணத்தையுண்டுபண்ண முடியும்; எனினும் அவர்கள் பயிற்சி பெற்றவர்களாயும் மனிதத்தன்மை நிறைந்தவர்களாயும், எவருடைய வலோற்காரத்தையும் ஏற்காதவர்களாயுமிருக்கவேண்டும்.

---

## திரு இருதய தாசர்களுக்கு அறிவித்தல்

**ஆசனக்கோயிலில் யேசுவின் திரு இருதயக் கூட்டம் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதம் முதல் வெள்ளிக்கிழமை (3-11-61) திரு இருதயநாதரின் பேரால் திவ்விய பூசைகண்டு தேவநற்கருணை பெற்றுக்கொள்ளும்படி திரு இருதயப்பத்தியுடையவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

**ஞாயிற்றுக்கிழமை 12-11-61, சற்பிரசாத ஆசிர்வாதத்தின்பின் அர்ச். டி மொன்போட் மண்டபத்தில் திரு. பி. சவிரிமுத்து அவர்களால் ஒரு சிறியஉபந்நியாசம் கொடுக்கப்படும். அப்பொழுது திரு இருதய தாசர் கூட்டத்தில் சேர விரும்புவோர்களின் பெயர்கள் பதியப்படும்.**

**வண. எல், ஜே. அகஸ்தின், O. M. I.**

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாச வேளை

நமது நிருபர் அமலன்

# அன்னையின் ஆணை

● பாப்புவின் அன்னை ● சமையல் வீரர் ● தாழ்மையும் பண்பும் ● எளிமை வாழ்க்கை

○ ஹிட்லரும் பாப்புவும்

அம்மா: இக் கிழமையிலேதானே பாப்பாண்டவரின் தினம் வருகிறது?

அப்பா: ஆமாம். எதற்காக இவ்வளவு அக்கறையோடு கேட்கிருய்?

அம்மா: இங்கே ஏராளமான கத்தோலிக்க பத்திரிகைகளும், புத்தகங்களும் வருகின்றனவே; பாப்பாண்டவர்பற்றிய செய்திகளை எப்போதாவது எனக்குச் சொல்லியிருக்கிறீர்களா?

பெரியண்ணு: சரி, இன்றைக்குச் சொல்லிவிட்டால் போகிறது.

அம்மா: அதைத்தான் சொல்ல வந்தேன். இன்றைக்குப் பாப்பாண்டவர்பற்றித்தான் பேசவேண்டும். வேறு ஏதாவது சங்கதிகளைப்பற்றிச் சொன்னீர்களோ எழும்பிப் போய்விடுவேன்.

அன்ரன்: அன்னையின் ஆணைப்படியே நடக்கட்டும்.

நிர்மலா: பதின்மூன்று பிள்ளைகளைக்கொண்ட ஒரு குடும்பத்தில் மூன்ருவது பிள்ளையாகப் பிறந்தவர் எங்கள் பாப்பரசர். மூத்தபுதல்வர் என்ற சிறப்பும் அவருக்குத்தான். ஆரம்பகல்வி முடிந்தபின் கட்டளைக்குரவர் பாப்புவின் அன்னையான மரியாஅன்னுவிடம் சென்று, ஆஞ்சலோ ரொங்கல்லியைக் குருத்துவ பயிற்சிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். அந்த வறிய தாயாரும் தன் நிலையைக் கவனியாது அதற்குச் சம்மதித்தாள். ரொங்கல்லி புறப்படும்தினம் வந்தது. அதிகாலையிலேயே அன்னை புறப்பட்டுச்சென்றவள் மாலையில்தான் வீடுதிரும்பினுள். தன் புதல்வனுக்குச் சிறிது கைப்பணம் கொடுத்து விடுவதற்காகவே கடன் வாங்க எங்கெல்லாமோ அலைந்தாள். மேசையின்மேல் சில நாணயங்களை வைத்தபின், "தம்பி! உன் ஏழைத் தாயார் உனக்குக் கொடுக்கக்கூடியது இவ்வளவுதான்" என்று துக்கத்தோடு கூறினுளாம்.

அப்பா: அன்னையின் அரிய தியாகத்தால் இன்று திருச்சபைக்கு ஒரு சிறந்த தலைவர் கிடைத்துள்ளார். தன் குடும்பத்தின் வருங்காலத்தை அந்த அம்மணி சிறிது சிந்தித்திருப்பினும் இந்நிலை மாறியிருக்கும்.

பெரியண்ணு: தனது புதல்வன் மேற்றிராணியாராக அபிஷேகம் பெறுவதைக் காணும் பாக்கியம் அந்த உத்தமிக்குக் கிடைத்தது. முன்னேற்றமடையாத ஒரு கிராமியப் பெண்ணுன அன்னு அபிஷேகச் சடங்குகளில் சிலவற்றைக் கண்டு பயப்பிராந்தி கொண்டாள். ரொங்கல்லியின் தலையைச் சுற்றிப் பட்டுநாடா கட்டப்பட்டதைக் கண்டு, "ஏன் இப்படிச் செய்கிறுர்கள்? ரொங்கல்லிக்கு ஏதும் நோயா?" என்று தனது புதல்வியைக் கேட்டாளாம். மீண்டும்ரொங்கல்லியின்கரங்களை ஒன்றுகக் கட்டியதைக்கண்டு, "என்ன நேர்ந்தது எனது புதல்வனுக்கு?" எனப் புலம்பினுளாம். அவளைச் சாந்தியாக்குவதில் பாப்பரசரின் சகோதரிகள் அதிக சிரமப்பட்டார்களாம்.

அகஸ்ரின்: அந்தஸ்து, குலம், செல்வாக்கு என்பன திருச்சபையில் உதாசீனம் செய்யப்படும். பண்பு, திறமை, தியாகமனப்பான்மை, சேவை முதலியவற்றுக்கே மதிப்புத் தரப்படுகிறதென்பதற்கு அருளப்ப பாப்பரசரின் தெரிவு சிறந்த உதாரணமாகும்.

அஞ்சலா: வத்திக்கானிலுள்ள சமையற்காரரை அடிக்கடி பாப்பரசர் போய்ச் சந்திப்பாராம். சமையற்கலை பற்றி வெளிவரும் ஒரு சஞ்சிகையில் இச்சம்பவத்தைப் படித்தேன். ஒரு நாள் பாப்பரசரின் தாயார் இறைச்சிச் சூப்பை அடுப்பில் வைத்துவிட்டு அதைக் கவனிக்கும்படி ரொங்கல்லியைப் பணித்து, வெளியே சென்றிருந்தார். ரொங்கல்லி அகப்பையையும் தூக்கிக்கொண்டு அடிக்கடி சூப்பைக் கலக்கிக்கொண்டேயிருந்தாராம். அப்போது சூப்பில்குமிழிகள்ஏற்படுவதைக் கண்ட அவர் இறைச்சி நன்கு அவிந்துவிட்டதென எண்ணிப் பாத்திரத்தை அடுப்பைவிட்டு இறக்கிவிட்டுத் தனது சமையல்பற்றி எல்லாரிடமும் பிரஸ்தாபித்துக்கொண்டார். சாப்பாட்டு நேரத்தில் அவியாத இறைச்சியையும், கொதிக்காத சூப்பையும் ருசிபார்த்த குடும்பத்தினர் எல்லோருடைய பேச்சுக்களும் ரொங்கல்லிக்குக் கிடைத்தனவாம். இச்சம்பவத்தைப் பாப்பரசரே சமையற்காரரிடம் கூறியிருக்கிருர்.

கார்மேலா: பாவிமனுஷன் இந்தப் பழங் கதைகளையெல்லாம் இப்போது சொல்லித் தன்னையேன் அவமானப் படுத்தவேண்டும்?

அப்பா: எங்கள் பாப்பரசர் சாதாரண குலத்திலுதித்தவர். தம்மைப் பற்றிய பெருமையை அறவே ஒழித்தவர். தமது பழைய நிலை எவ்விதம் இருந்தது என்பதை எடுத்துக் கூறுவதன்மூலம் தம்மையே தாழ்த்திக்கொள்கிருர் அல்லவா?

அகஸ்ரின்: நீங்கள்சொல்வது சரி. பல வருடங்களாகப் பாப்பரசரின் ஏவலாளராகக் கடமையாற்றிய கியூடோ குசோ என்பவர் மட்டில் பாப்பரசர் மதிப்பும், நல்லெண்ணமும் கொண்டிருக்கிருர். கருதினுல் ரொங்கல்லி பாப்புவாகத் தெரியப்பட்டதும் தமது ஏவலாளரை அழைக்கும்போதெல்லாம் கியூடோகுசோ ஓடிவந்து, முழங்காலில் நின்று வணங்கிப் பரிசுத்த தந்தையே என அழைப்பார். தாம் அழைக்கும் ஒவ்வொரு தடவையும் இவ்விதம் மரியாதைசெய்யவேண்டியதில்லை எனப் பாப்பரசர் தெளிவாக எடுத்துக்கூறியும் ஏவலாளர் குசோ திருச்சபைத் தலைவருக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளைச் செய்தே வந்தார். ஆகவே, அருளப்ப தந்தை கியூடோ குசோவை அழைத்துப் பழைய கருதினுல் ரொங்கல்லிக்கு என்ன மதிப்புக் கொடுத்தீரோ, அதையே இப்போதும் எமக்களிக்கவேண்டும். இல்லையேல் நாம் வேறு ஒருவரை ஏவலாளராகத் தெரிய நேரிடும் எனக் கண்டிப்பாகக் கூறினுர். கியூடோவும் தனது நீண்டகால எசமானை மனம்நோகச்செய்ய விரும்பாது தமது வழக்கத்தை விட்டுவிட்டார்.

பெரியண்ணு: வயதில் முதிர்ந்த கருதினுல்மார் தம்மைக் காண வரும்போதெல்லாம் அவர்களை முழந்தாளிட்டு மரியாதைசெய்ய விடுவதில்லையே எங்கள் பாப்பு. எவ்வளவு பெருந்தன்மையான செயல் இது.

அன்ரன்: முன்பெல்லாம் பாப்பரசர் தமது தோட்டத்தில் உலாவும்போது அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின் மேல்மாடத்திலுள்ள சன்னல்களைச் சாத்திவிடுவார்களாம். ஏனெனில், அம்மகாலயத்தைத் தரிசிக்க வருபவர்கள் அந்தச்சன்னல்களால் வத்திக்கான் தோட்டத்தையும், பாப்பரசரின் நடபடிகளையும் காணலாமாம். ஆயின், இந்தப்பாப்பரசரோ அம் மகாலயச் சன்னல்களைச் சாத்தவேண்டியதில்லை என்றும், தமது நடவடிக்கைகளை எவரும் பார்க்கலாம் என்றும் கூறினுராம்.

கார்மேலா: சில தருணங்களில் பாப்பரசர் தமது காவலாளர்கட்கும் தெரிவிக்காது வத்திக்கானைவிட்டுப் புறப்பட்டுவிடுவாராம். ஒருமுறை அவ்விதம் பாப்பரசரைக் காணுது தேடியபோது வத்திக்கானுக்கு அண்மையிலுள்ள வயோதிக குருமாருக்கான இல்லத்தைத் தரிசித்துவிட்டுக் கால்நடையாக வந்துகொண்டிருந்தாராம்.

பெரியண்ணு: பாப்பரசரின் பாதுகாப்புச் சம்பந்தமாக இத்தாலிய அரசாங்கத்துக்கும் சிலகடமைகள் உண்டு. முன்பெல்லாம் பாப்பரசர் வத்திக்கானைவிட்டுவெளியேறும்சமயங்களில்வத்திக்கான் அதிகாரிகள் இத்தாலிய பொலிஸ் அதிகாரிகட்கு இதுபற்றித் தெரிவிப்பார்கள். உடனே பல இத்தாலிய பொலிஸ் வீரர்கள் அர்ச். பேதுருவானவர் மகாலய வாயிலில் காத்துநிற்பர். பாப்பரசரின் இரதம் புறப்பட்டதும் முன்னும், பின்னும் காவலாகச் செல்வார்கள். இப்போது அருளப்ப பாப்பரசர் எவருக்குமே தெரிவிக்காது திடீர்ப் பிரயாணங்களை மேற்கொள்வதால் இத்தாலிய அரசாங்கத்தின் கட்டளைப்படி சில பொலிஸ் அதிகாரிகள் மோட்டர் சைக்கிள்களுடன் பேதுருவானவர் மகாலயவாயிலில் இரவுபகலாகக் காத்திருக்கிருர்களாம் பாப்பரசர் புறப்பட்டதும் அவர் விரும்பினுலென்ன, விரும்பாவிட்டாலென்ன அந்த அதிகாரிகள் பாதுகாப்பாகச் செல்வார்களாம்.

அகஸ்ரின்: ஒவ்வொரு மாதமும் ஒன்பதாம் தேதிகளில் பாப்பரசர் அர்ச். பேதுருவானவர் மகாலயத்தின் கீழ் அமைந்துள்ள சுரங்கத்துக்குச் சென்று அங்குள்ள காலஞ்சென்ற 12-ம் பத்திநாதரின் கல்லறையின்முன் முழந்தாளிட்டு வேண்டிக்கொள்கிருராம். இதுதவிர, தமது படிப்பறையில் தமது காலத்தில் திருச்சபையை ஆளுகைசெய்த ஐந்து பாப்புமாரின் உருவப்படங்களையும் தூக்கியிருக்கிருராம். அந்த ஐந்து பாப்புமார்களுமே தம்மை நடாத்திச்செல்பவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். எங்கே அன்ரன், கார்மேலா! யார் அந்த ஐந்து பாப்புமார்? சொல்லுங்கள்பார்க்கலாம்.

அன்ரன்: 12-ம் பத்திநாதர், 11-ம் பத்திநாதர், 10-ம் பத்திநாதர் ...

கார்மேலா: 13-ம் சிங்கராயர்; 15-ம் ஆசீர்வாதப்பர்.

நிர்மலா: தம்மால் ஆளுகைசெய்ய இயலாதெனப் பாப்பரசர் ராஜினுமாச் செய்யலாமா?

அகஸ்ரின்: செய்யலாம். கடந்த இரண்டாவது மகாயுத்தத்தின்போது சர்வாதிகாரி கிற்லர் பாப்பரசரைக் கைதுசெய்வதற்குத் திட்டமிட்டிருந்தார். அவ்விதம் தாம் கைதுசெய்யப்பட்டால் உடனடியாக றேமைக்கு வெளியேயுள்ள கருதினுல் ஒருவர் பாப்புவின் ஸ்தானத்துக்கு உயர்த்தப்படவும், தமது பதவியை ராஜிநாமாச் செய்வதன்மூலம் திருச்சபைத் தலைவரைக் கைதுசெய்யாது சாதாரண கருதினுலையே கைதுசெய்ய வழிசெய்யவும் ஒருதிட்டத்தைப் 12-ம் பத்திநாத பாப்பரசர் வெகுஇரகசியமாக வைத்திருந்தாராம்.

அப்பா: நானும் இந்தச் சம்பவத்தை வாசித்தேன். உடனடியாக வேருெருவர் பாப்புவாகக் கருமங்களை நடாத்திக்கொண்டுபோவது மிகச் சிறப்பான காரியம்தான்.

அன்ரன்: அம்மாவுக்கு இப்போது மிகச் சந்தோஷமாயிருக்கும். பாப்புவைப்பற்றிய சங்கதிகளைக்கேட்க.

அம்மா: எங்கள் நல்ல பாப்பானவர் பற்றியறிய ஆர்தான் விரும்பார்?

## ஜனதிபதி கென்னடி......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் வெள்ளைமாளிகையில் மேற்படி பதக்கத்தை இம்மதி 6-ந் திகதி அளித்தார். கிரேக்க பிரிவினைச்சபையில் உயர்பதவிவகிக்கும் அதிகாரிகளுள் ஒருவர் அமெரிக்காவைத் தரிசிப்பது இதுவே முதல் தடவையாகும்.

இவர் அமெரிக்காவின் பலபகுதிகளுக்கும் சுற்றுப்பிரயாணஞ் செய்யவிருக்கிருர். தமது பிரயாணத்தின்போது ஏறக்குறைய 12 நகரங்களில் கிரேக்கபிரிவினைச் சபைக் கிறிஸ்தவர்களைத் தரிசிப்பார். பிதாப்பிதாவான பெனடிக்ற் அவர்களுக்குப் பரிசுத்த பூமியிலுள்ள அநேக பரிசுத்தஸ்தலங்களின் ஆட்சியுரிமையுண்டு. கிறிஸ்துநாதரின் கல்லறைக்கோவிலும் இவரது ஆட்சிக்குட்பட்டதே. அத்துடன் பெத்தலகேமில் கிறிஸ்துநாதர் பிறந்த இடத்திலுள்ள ஆலயத்தின் பரிபாலனமும் இவருக்குக்கீழ்தான் அடங்கியுள்ளது.

ஜனதிபதி கென்னடிக்கு அளிக்கப்பட்ட கௌரவப்பட்டமளிப்பும், பதக்கமும் பலநூற்றூண்டுகளாக அரசாங்கத்தினிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. சமீப காலத்தில் இக்கௌரவப்பட்டம் ஒஸ்திரியா-கங்கேரி சக்கரவர்த்தியான பிரான்சிஸ்யோசெவ் என்பவருக்கே கடைசியாக அளிக்கப்பட்டது.

## 1,000,000 பேருக்கு குடியேற்ற வசதிகள்

1952-ம்ஆண்டுமுதல் சர்வதேச கத்தோலிக்க குடியேற்றக்குழு 1,000,000பேர் பிறநாடுகளில் குடியேற உதவியளித்துள்ளது என்று இக்குழுவின் வருடாந்தமாநாட்டில் அறிவிக்கப்பட்டது. இக்குழு 37,000 பேருக்கு கடனுதவியளித்துள்ளது. ஒவ்வொருவருடமும் சுமார் 3,000 இத்தாலியர் கனடாவில் குடியேற உதவிசெய்யப் பட்டுள்ளனர். 12,000 ஸ்பானிய குடியேற்றவாசிகளுக்கும் உதவிசெய்யப்பட்டுள்ளது.

குடியேறுவதற்கு உதவிசெய்யப் பட்டவர்களுள் பெரும்பாலானவர்கள், அந்நாடுகளில் வேலைதேடிச்சென்று குடியேறிய ஆண்களின்மனைவி மக்களேயாவர். ஐரோப்பிய இடப்பெயர்ச்சிக்குழுவினுல் அரசாங்கங்களிடமிருந்து தருவிக்கப்பட்ட பணம் குடியேற்றவாசிகளுக்கு கடனுகவழங்கப்பட்டது.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday November 4-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org